பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

லிட்ரோ விலை மாற்றம் இல்லை
» 02

பொலிஸாரின் வசமிருந்த காணி விடுவிப்பு
» 05

மாணவர்களுக்கு சுவாச நோய்கள்
» 07

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 40

ஞாயிற்றுக்கிழமை
05 ஜனவரி 2025

மார்கழி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



# ஜனவரி 13 ஆம் திகதி சீனா செல்கிறார் அநுர

## சீன அதிபர் ஜின் பிங்கை சந்திப்பார்
## பிரமாண்டமான வரவேற்புக்கு ஏற்பாடு

**கொழும்பு, ஜனவரி 5**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 13ஆம் திகதி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

14

## மின்சாரச் சட்டங்களை மீளாய்வதற்குக் குழு


கொழும்பு, ஜன. 5
இலங்கை மின்சாரச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான அமைச்சரவையின் தீர்மானத்தைத் தொடர்ந்து. அது தொடர்பான பணிகளுக்காக 10 பேர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால இந்தக் குழுவுக்கு தலைமை தாங்குவதுடன்,
14

## அரசசேவைக்கு ஆட்சேர்ப்பு: நாணயநிதியம் நிபந்தனை!

கொழும்பு, ஜன. 5
அரசசேவைக்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சர்வதேச நாணயநிதியம் சில தடைகள் மற்றும் நிபந்தனைகளை விதித்துள்ளது என்று விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.
கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
14

## கஞ்சாவுடன் நேற்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 5
வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சாவுடன் மூன்று இளைஞர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மு.உதயானந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
14



இரு இளைஞர்களைக் காவுகொண்ட

## புளியம்பொக்கணைப் பாலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள்!

கிளிநொச்சி, ஜன. 5
கிளிநொச்சி ஏ-35 பிரதான வீதியில் புளியம்பொக்கணைப் பகுதியில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய பாலத்தில் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
குறித்த பாலத்தின் சீரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் பாதுகாப்புக்
14

## நாடாளுமன்றப் பதவிகளுக்கு வெளி அதிகாரிகள் வேண்டாம்
### நாடாளுமன்ற ஊழியர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 5
நாடாளுமன்றப் பதவிகளுக்கு வெளியிலிருந்து உயர் அதிகாரிகளை நியமிக்கும் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற ஊழியர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
இது தொடர்பில் நாடாளுமன்ற ஊழியர்
14

## சீன வைரஸ் பரவல் தொற்றுநிலை அல்ல
### அச்சப்பட வேண்டாம் என்று பேராசிரியர் சந்திம தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 5
சீனாவில் பரவிவரும் மெட்டாப்நியூமோ வைரஸ் ஒரு பெருந்தொற்று அல்ல. அது மிகவும் சாதாரணமான ஒரு வைரஸ் பரவல் நிலை என்று பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.
ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும்
14




'முதல் இந்தியா, இப்ப சீனா, அப்ப அடுத்தது அமெரிக்கா தானே..?'

# புதிய அரசியலமைப்பில் முழுமையான சுயாட்சியே தேவை
### தமிழ்த்தேசியக் கட்சி பிரேரணை

யாழ்ப்பாணம், ஜன. 5
தேசிய மக்கள் சக்தியால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் 'முழுமையான சுயாட்சியை' வலியுறுத்தும் வகையில் தமிழ்த்தேசியக் கட்சி பிரேரணை
14

## புலமைப்பரிசில் பரீட்சை: அடுத்தவாரம் மதிப்பீடு!
» 14

சஞ்சீவி

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எல்லைமீறும் அரசகட்டமைப்புகள் நிர்க்கதிக்குள் தள்ளப்படும் தமிழர்

*ரவிகரன் எம்.பி. காட்டம்*

மன்னார், ஜன. 5

**படையினர், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல்திணைக்களம் என அனைத்து அரச கட்டமைப்புகளாலும் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்படுவதனால் தமிழ் மக்கள் காணிகளை இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தென்பகுதிகளில் இவ்வாறான நிலமைகள் எதுவுமில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

மன்னார், மடு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் 2,22006 ஏக்கர் நிலங்களே வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்தன. 2009ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு 4,35000 ஏக்கர் நிலம் தற்போது வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருக்கின்றது.

இவ்வாறாக மிகப்பெரிய அபகரிப்புகளை தமிழர் தாயகப் பகுதியெங்கும் வனவளத் திணைக்களம் மேற்கொண்டுவருகின்றது.

-இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் எமது மூதாதையர்களுடைய பூர்வீகக் காணிகளாகும். வன்னி என்பது கடந்தகாலங்களில் விவசாயத்தில் சிறந்து விளங்கிய பகுதியாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது மக்களின் விவசாயக் காணிகள் அனைத்தும் வனவளத் திணைக்களத்தாலும், ஏனைய அரசதிணைக்களங்களாலும் பறிக்கப்பட்டநிலையில், மக்கள் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தென்பகுதிகளில் இவ்வாறான நிலமைகள் இல்லை. வடக்கு, கிழக்கிலேயே இவ்வாறு மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு எமது மக்கள் நிர்க்கதியாக்கப்படுகின்றனர்.

எனவே புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசாங்கம் தமிழ் மக்களுடைய காணிகள் அந்த மக்களுக்கே கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ச-26)

## லிட்ரோ விலை மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 5

லிட்ரோ எரிவாயு விலைச் சூத்திரத்தின் பிரகாரம் லிட்ரோ உள்நாட்டு எரிவாயு விலை இந்த மாதம் திருத்தப்படாது என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன நேற்று தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் நிர்ண யிக்கப்பட்ட லிட்ரோ எரிவாயுவின் விலையே தற்போதும் செல்லுபடியாகும்.

அதன்படி 12.5 கிலோகிராம் லிட்ரோ உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.3,690 ஆகவும், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை ரூ.1,482 ஆகவும், 2.3 கிலோ சிலிண்டரின் விலை ரூ.694 ஆகவும் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## புகையிலைப் பாவனை மாணவரிடையே உயர்வு

யாழ்ப்பாணம், ஜன. 5

பாடசாலை மாணவர்களிடையே புகையிலை சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பல்வேறு வகையான சிகரெட்டுகளை மாணவர்கள் பாவிப்பது ஆபத்தானது.

மாணவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ளதாகவும் அவர்கள் அறிவுறுத்தினர். (ச-இ)

## ‘ஈ - ட்ராபிக்’ செயலி ஆபத்து

*இணையத்தள நிபுணர் எச்சரிக்கை*

கொழும்பு, ஜன. 5

பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ள ஈ-ட்ராபிக் மொபைல் செயலியானது தனிமனித சுதந்திரம், இணையத்தள பயன்பாடு என்பவற்றுக்கு ஆபத்தானது என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதான இணையத்தளப் பாதுகாப்பு நிபுணரான சஞ்சன ஹத்தொடுவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொலிஸ் திணைக்களத் தரவுகள் அண்மைக்காலமாக திருட்டுப்போகும் சந்தர்ப்பங்களை அடிக்கடி கேட்க முடிகின்றது. அவ்வாறான நிலையில் அவர்கள் உருவாக்கியுள்ள செயலி பாதுகாப்பானது என்று எந்த வகையிலும் உறுதிப்படுத்த முடியாது. மறுபக்கத்தில் அவர்களின் செயலியைத் தரவிறக்கம் செய்யும் தொலைபேசிகளின் இருப்பிடத்தை (லொகேஷன்) கண்டறிவதற்கும் இந்தச் செயலியைப் பயன்படுத்தலாம். அது தனிமனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடாகும்.

இவற்றுக்கு அப்பால் எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ள தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு சட்டவரைவின் ஏற்பாடுகளுக்கும் இந்த மொபைல் செயலி எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## தூதுவர்கள் நியமனம் காலதாமதமாகும்

கொழும்பு, ஜன. 5

தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை நியமிப்பது ஒரு சிக்கலான செயல் என்றும், அதற்கு நியாயமான காலஅவகாசம் தேவை என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் தூதுவர் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கான அரசியல் நியமனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இலங் கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர் அல்லது உயர்ஸ்தானிகர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கும் போது, அந்த நியமனத்துக்கு அந்த நாட்டின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)



# தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடாதுவிடின் தமிழ் மக்களுக்கு எதிர்காலமில்லை

*சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 5

தமிழர்களுக்கான அரசியல் தீர்வைப் பெறவேண்டுமாயின் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் கொள்கை ரீதியில் பொதுநிலைப் பாடொன்றுக்கு வரவேண்டியது அவசியம். தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றுபடாதுவிடின் தமிழர்களுக்கு வரலாறு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசமைப்பு குறித்து தமிழ்த்தேசியக் கட்சிகள் கூடி ஆராய்வது தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசமைப்புக் குறித்து முதலில் எமது கட்சிக்குள் ஒரு முடிவை எடுத்துக்கொள்ளவேண்டிய தீர்மானிக்கவேண்டியுள்ளது.

அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த்தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியில் பொதுநிலைப்பாடு ஒன்றுக்கு வரவேண்டியது அவசியம்

தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை - என்றார். (ச-இ)

## ‘தூய இலங்கை’ திட்டத்தில் எவரும் கைதாகமாட்டார்

*அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 5

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ‘தூய இலங்கைத் திட்டம்’ ஊடாக எவரும் கைதுசெய்யப்படமாட்டார்கள் என அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக எவரையும் கைது செய்யவோ, வழக்குத் தொடரவோ அல்லது நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவோ அரசாங்கம் யாருக்கும் அறிவுறுத்தல் வழங்கவில்லை. இந்தத் திட்டம் நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடர்பில் போலியான தகவல்கள் பரப்பப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி அரிசி விற்பனை யாழ்.மாவட்டத்தில் நெருக்கடி

## கட்டுப்பாட்டு விலையால் வந்த வினை

யாழ்ப்பாணம், ஜன.5

அரசாங்கத்தால் அரிசிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையால் யாழ்.மாவட்டத்தில் இறக்குமதி அரிசியை விற்பனை செய்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என யாழ்.வர்த்தக சங்கத்தின் உப செயலாளர் ஜெயமோகன் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் வகை அரிசி எம்மிடம் தாராளமாக இருக்கின்றது. அதில் எவ்வித சிக்கலும் இல்லை. அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள கட்டுப்பாட்டு விலையால் இறக்குமதி அரிசி விற்பனையிலேயே தற்போது பிரச்சினை நிலவுகின்றது. கொழும்பில் வாங்கும் அரிசியை நாங்கள் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரும்போது அதற்குப் போக்குவரத்துக் கூலி உள்ளிட்ட செலவுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு வரும்போது அதனைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்படுகின்றது. சம்பா, கீரிச் சம்பா, வெள்ளைப் பச்சையரிசி ஆகிய அரிசி வகைகள் தாராளமாகக் கிடைப்பதில்லை. ஆகவே இறக்குமதி செய்யப்பட்ட சம்பா, கீரிச் சம்பா, சிவப்புதீட்டல், வெள்ளைப்பச்சையரிசி ஆகியவற்றை விற்பனையில் இருந்து தற்காலிகமாக விலக்கிக்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-125)



## 'பசுமை நெடுந்தீவு 'செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பு தனது ஐந்தாண்டுச் செயற்றிட்டத்தில் ஒன்றாக நெடுந்தீவைப் பச்சை வளமாக மாற்றும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய, விதைகள் மூலம் நாற்று மேடைகளை அமைத்து மரங்களை உருவாக்கும் செயற்பாடு, நெடுந்தீவில் அமைந்துள்ள ஊரும் உறவும் அமைப்பின் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்தச் செயற்பாட்டில் நெடுந்தீவு ஊரும் உறவும் நிறுவனத்தின் நிர்வாகத்தினர் மற்றும் பணியாளர்கள் இணைந்து கொண்டனர். (ச-25,66)



வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் செ. பத்மநாதனால் மூத்த இசைநாடகக் கலைஞர் கலாபூசணம் ப.பரராஜசிங்கத்துக்கு 'யாழ் முத்து' விருது வழங்கிவைக்கப்பட்டது. (ச-25)

## ஸ்ரீரமணர் ஜயந்தி

யாழ்ப்பாணம்,ஜன.5

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 145 ஆவது ஜயந்தி தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம்பெறவுள்ளது. இதில் பூசைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-33)




## அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடல்!

கிளிநொச்சி, ஜன. 5

2025 ஆம் ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவினை மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்து அதனை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடல் பிரமந்தனாறு கிராம அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கண்டாவளைப் பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தலைமையில்,குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. (ச-25,113-9)





## முல்லை. வித்தியானந்தக் கல்லூரி அதிபரை மாற்றக்கோரி போராட்டம்

முல்லைத்தீவு, ஜன.5

முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர் ஆகியோரால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த அதிபர் கல்லூரியின் வளர்ச்சியை சீர்குலைப்பதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக உள்ளார்.

14 ஆசிரியர்களுக்கு அண்மையில் அவர்களுக்கான பதிலீடு இன்றி, தனிப்பட்ட பழிவாங்கல் நோக்கில், இடமாற்றத்துக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைச் சொத்துகளை பாதுகாப்பது மற்றும் அது தொடர்பான வெளிப்படைத் தன்மை இல்லாது செயற்படுகிறார். அதிபர் மீதான நிதிமோசடி விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.

தீர்மானங்கள், ஆலோசனைகள் எதனையும் கருத்தில் கொள்ளாமல் தான்தோன்றித்தனமான அதிபரின் செயற்பாடுகளால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. எனவே குறித்த அதிபரை உடன் இடமாற்றம் செய்யவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

இதன்போது போராட்ட இடத்துக்குச் சென்ற மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் குறித்த போராட்டத்துக்கான காரணங்களைக் கேட்டறிந்த நிலையில் போராட்டக்காரர்களால் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.



## காணாமற்போனவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சியில் காணாமல் போன மனநலம் பாதிக்கப்பட்ட நபரின் சடலம் முறிப்புக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் மனநலம் பாதிக்கப்பட்ட நபரொருவர் காணாமற்போயுள்ளார் என கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவரது துவிச்சக்கர வண்டி மற்றும் செருப்பு ஆகியன கிளிநொச்சி முறிப்புக் குளத்தின் தடுப்பணையருகே கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவர் குளத்தில் விழுந்துள்ளாரா? என்ற சந்தேகத்தில் முறிப்புக் குளத்தில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் அவரது சடலம் நேற்று முறிப்புக் குளத்தில் கண்டெடுக்கப்பட்டது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கனைப் பாலம் மார்ச்சுக்குள் புனரமைப்பு

கிளிநொச்சி, ஜன. 5

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ-35 பிரதான வீதியிலுள்ள புளியம்பொக்கனைப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் மார்ச் மாதத்துக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் குறித்த பாலத்தில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாகவும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாகவும் இடைநடுவே கைவிடப்பட்டன.

அதனால் எந்தவிதப் பாதுகாப்பும் இன்றி பாலம் காணப்படும் நிலையில் இந்தப் பாலத்தில் பல விபத்துகள் நேரிடுவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அண்மையில் இந்தப் பாலத்தினூடாக பயணித்த இரு இளைஞர்கள் பாலத்தினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வடமாகாண ஆளுநர் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதுடன், எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பாலத்துக்கான புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் தற்காலிக பாதுகாப்புக்காக வீதி விளக்குகள் மற்றும் வீதி சமிக்ஞைகள் பொருத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார். (ச-22,27,113)



## புகையிலைச் செய்கை வடமராட்சியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.5

பெரும்போகச் செய்கையை முன்னிட்டு பருத்தித்துறை, நெல்லியடி, கரவெட்டி, வதிரி, உடுப்பிட்டி உள்ளிட்ட வடமராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட பல இடங்களில் புகையிலைக் கன்றுகள் நடுகை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெங்கால் புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளப் பாதிப்புகள் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் ஒரு மாத கால தாமதத்துக்குப் பின்னர் இந்தச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ச-45-100)



## சட்டத்தைக் கையிலெடுப்பது அதிகாரத் துஷ்பிரயோகமே!

தொழிலதிபர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 5

சட்டத்தைக் கையிலெடுத்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அபகீர்த்தியை ஏற்படுத்துமாறு நடந்துகொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு அதிகாரமில்லை என்று சிற்றி வன்பொருள் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாண விடுதியொன்றில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் 65 வருட காலமாக கட்டப் பொருள் வியாபாரத்தை செய்து வருகிறோம். இவ்வாறான நிலையில் எமது நிறுவனத்துக்கு சொந்தமான வாகனம் சுண்ணக் கற்களை திருகோணமலைக்கு கொண்டு செல்லும் வழியில் சாவகச்சேரியில் வைத்து மறித்த நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சாரதியை மிரட்டி சட்டத்துக்கு விரோதமான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

முறைப்படி அனுமதி பெறப்பட்டே நாம் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றோம். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றுவரும் நிலையில் அதனைத் தடுத்து அநாகரிகமாக நடந்துகொள்வது இழுக்காகும்- என்றார். (ச-27)

## வவுனியா இளைஞர் கனடாவில் சாவு

றொறண்டோ, ஜன. 5


வவுனியாவைச் சேர்ந்த தமிழ் இளைஞரொருவர் கனடாவில் வசித்துவந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். அவர் பயணித்த காரின் கதவு திறக்கப்படாமையால் அதிக நேரம் மூச்சுத் திணறல் ஏற்பட்டதனாலேயே பரிதாபமாக உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் நெவில் டிலக்சன் (வயது - 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-18-110)




## பச்சிலைப்பள்ளி மைதானம் சீரமைப்பதற்கு நடவடிக்கை

பளை, ஜன.5

பச்சிலைப்பள்ளிப் பிரதேச பொதுவிளையாட்டு மைதானம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ளது. அதற்கென மதிப்பீட்டு வரைவு தயாரிப்பதற்காக பிரதேச செயலர் மற்றும் பிரதேசசபை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை மைதானத்தைப் பார்வையிட்டனர். (ச- 25,9-113)





ஊர்காவற்றுறை

## படகு திருத்தும் நிலையத்தை அமைச்சர் சந்திரசேகர் பார்வை

யாழ்ப்பாணம், ஜன.5

ஊர்காவற்றுறையில் கடந்த அரசாங்கத்தால் திறந்துவைக்கப்பட்டு செயலிழந்து காணப்படும் படகு திருத்தும் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சென்று அமைச்சர் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்த நிலையத்தை இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் அங்கு குறிப்பிட்டார். (ச-45-27)

# இடமாற்றத்தைத் தவிர்க்கும் ஆசிரியர்களுக்கு என்ன நடவடிக்கை?

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கேள்வி

வவுனியா, ஜன. 5

இடமாற்றம் வழங்கியும் அந்தந்த பாடசாலைகளுக்கு கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது? என வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பினார்.

அண்மையில் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடமாற்றம் என்பது இடமாற்ற சபை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தனி ஒரு அதிகாரியோ அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரோ அதனை மேற்கொள்ள வில்லை. இதற்கு எதிராக வலயக் கல்விப் பணிப்பாளரால் எந்த வொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது.

எனவே அதற்குரிய தீர்வை வரையறுத்துத் தந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பொலிஸார் வசமிருந்த காணி வவுனியாவில் விடுவிப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, ஜன. 5

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் பகுதியில் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காணியொன்றை விடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான காணி 2009 ஆண்டுக்குப் பின் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

குறித்த காணியை விடுவிக்க அந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் முயன்றும் அது பயனளிக்கவில்லை. இந்த நிலையில் அண்மையில் நடைபெற்ற வவுனியா வடக்குப் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறித்த வி[illegible]பட்டது.

இந்தநிலையில் வவுனியாவுக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபருடன் குறித்த காணி தொடர்பில் கலந்துரையாடப்பட்டதையடுத்து உடனடியாக அந்தக் காணியை விடுவிக்க வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக்காரியங்கள் இழுபறியாகக்கூடும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர் செல்ல நேரிடும்போது கைப் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாய்வழியில் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கடகம்:** பிற்பகலுக்கு மேல் எதிலும் நிதானமாக செயல்படவும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களின் சந்திப்பு சங்கடம் தருவதாக இருக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் செயல்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். பழைய கடன்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. சிலருக்கு மகான்களின் தரிசனமும் ஆசிகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் வருகை உற்சாகம் தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். சகோதர வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். குடும்பம் தொடர்பான வேலைகளுக்காக பயணம் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் உண்டாகும். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆனால், தேவையான பணம் கையிலிருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நவீனரக ஆடைகளை வாங்கி மகிழும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.





படங்கள்: ஐ.சிவசாந்தன்

# நல்லூர் சிவன் ஆலய மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.5


நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-45)



# மரநடுகை!

யாழ்ப்பாணம், ஜன.5

இயற்கையை வளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும் 'நந்தவனம்' மரவளர்ப்புச் செயற்றிட்டத்தின் ஆறாம் கட்டமாக மரநடுகை நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. (ச-22,66)



# வடமராட்சி கிழக்குக் கடலில் இறந்து ஒதுங்கிய ஆமை

யாழ்ப்பாணம், ஜன.5

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்கரையில் இறந்த நிலையில் கடல் ஆமை ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கரையொதுங்கியுள்ளது. இது தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (ச-22,100)

# மியான்மர் அகதிகளுக்கு செஞ்சிலுவைச்சங்கம் உதவி

முல்லைத்தீவு, ஜன. 5

கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 103 மியான்மர் நாட்டு அகதிகளுக்கு செஞ்சிலுவைச்சங்கத்தால் உடைகள், தலையணைகள், போர்வைகள், சானிடைசர்கள், துண்டுகள் மற்றும் கழிப்பறை சுத்தம் செய்யும் கருவிகள் என்பன அண்மையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ச- 25, 19)

# பொதுக்கூட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணம் புலோலி மெ.மி. த. க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறவுள்ளது. (ச-22)

# யாழ். பல்கலைக்கழகத்தில் திருவெம்பாவை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் 5 ஆவது வருடமாக நேற்றுச் சனிக்கிழமை திருவெம்பாவைப் பாராயணம் இசைக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது பரமேஸ்வரா ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, கலட்டிச்சந்தி ஊடாக யாழ். பல்கலைக்கழகப் பாலசிங்கம் விடுதியினைக் கடந்து தபாற்பெட்டிச் சந்தி ஊடாக பரமேஸ்வராச் சந்தி வழியாக மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தை வந்தடைந்தது. நிகழ்வில் யாழ். இந்து மன்றப் பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.ரமணராஜா, கலைப்பீட மாணவர் ஒன்றிய பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சு. கபிலன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45-125)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

"தந்திரங்களைப் பத்து வருடங்களுக்கு ஒருமுறை மாற்றிக்கொண்டு இருப்பவனால் தான் எப்போதும் தலைவனாக இருக்க முடியும்."

– நெப்போலியன்–

# கடினமான முடிவும் ரணிலும்!

பொருளாதார நெருக்கடி இன்னமும் நாட்டைவிட்டு நீங்கவில்லை. எனவே, சில கடினமான முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது என்று ஓர் அபாய அறிவிப்பை விடுத்திருக்கின்றார் வெளிவிவகார அமைச்சரான விஜித ஹேரத். குடும்பமாக உழைக்கும்போது குடும்ப நன்மைக்காக சில கடினமான முடிவுகளை எடுப்பதில்லையா? அவ்வாறான ஒரு நிலைக்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் முன்னறிவித்திருக்கின்றார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் விரைவில் முன்வைக்கப்படவுள்ளது. நாணயநிதியத்தின் பணியாளர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்த நிலையில், நாணயநிதியத்தின் நிறைவேற்றுக் குழு இலங்கைக்கான கடன் வழங்கலை இன்னமும் நூறுவீதம் உறுதிப்படுத்தவில்லை. அந்தக் கடன்வழங்கல் இலங்கைக்குச் சாத்தியமாவதற்கே அநேக வாய்ப்புகள் இருக்கின்றன. எனினும், 'என்னவேண்டுமானாலும் நடக்கலாம்' என்ற நிலையே நிலவுகின்றது எனக் கூறினாலும் அதில் தவறொன்றும் இல்லை. அத்துடன், நாணய நிதியத்தின் மூன்றாம்கட்ட கடன் திட்டங்களுக்கும், இலங்கை அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கும் நேரடி-மறைமுகத் தொடர்புகள் இருக்கலாம் என்று கருதப்படும் நிலையில்தான் 'கடினமான முடிவுகளை' எடுக்கவேண்டியுள்ளது என்று அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார். பொருளாதார வீழ்ச்சிக்குள் இலங்கை சிக்குண்டு, திவால் நிலையை அடைந்தபோது, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். திவாலடைந்த நாட்டுக்கு உடனடிச் சுவாசம் வழங்கும் வகையில் அவர் சில கடினமான முடிவுகளை மேற்கொண்டார். நாடு திவால் நிலையை அடைந்தமைக்கு, கடினமான முடிவுகள் எடுக்கப்படுவதற்குப் பதிலாக 'பிரபலமான முடிவுகள்' எடுக்கப்பட்டமையே காரணம் என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க, வரி விதிப்புகளை மையப்படுத்தி சில முடிவுகளை மேற்கொண்டார்.

அந்தத் தருணத்தில் வேறெந்தத் தெரிவுகளும் இல்லாத நிலையில் அவர் மேற்கொண்ட 'கடினமான' முடிவுகளை தற்போதைய ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்தியினர் கடுமையாகக் கண்டித்தனர். நாட்டுமக்களின் முதுகில் பொருளாதாரச் சுமைகள் ஏற்றப்படுகின்றன என்று அமைச்சர் விஜித ஹேரத் தரப்பினர் முழங்கினார்கள். இவ்வாறிருக்கையில், வெளிவிவகார அமைச்சரின் தற்போதைய 'கடினமான முடிவுகள்' தொடர்பான அறிவிப்பு எதை மையப்படுத்தியது என்ற சந்தேகம் இலங்கையர்களின் மனங்களில் எழுகின்றது. ஒரு வேளை, தேசிய மக்கள் சக்தியினரும் வரிவிதிப்புகளை மையப்படுத்தித்தான் சில திட்டங்களை மேற்கொள்ளப் போகின்றார்கள் என்றால், அவர்கள் தமக்குத் தாமே சவக்குழிகளை வெட்டுவதற்கு ஒப்பான செயலாக அது அமையும்.

சிலவேளைகளில் வரி விதிப்புகளுக்கு அப்பாற்பட்டு, உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதிக் குறைப்பு உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி தனது 'கடினமான முடிவுகள்' தொடர்பான அறிவிப்பை அமைச்சர் விஜித ஹேரத் விடுத்திருக்கலாம். ஆதலால், இவ்வாறு பொடிவைத்துப் பேசாமல், தங்கள் திட்டங்களை வெளிப்படையாக அறிவிக்க முதலில் தேசிய மக்கள் சக்தியினர் கற்றுக்கொள்ளவேண்டும்.







## 2024 இல் வரி வருமானம் ரூ. 1,958,088 மில்லியன்!

### இறைவரித் திணைக்களம் சாதனை

கொழும்பு. ஜன. 5

இலங்கை இறைவரித் திணைக்களம் கடந்த ஆண்டில் 1,958,088 மில்லியன் ரூபாவை வரியாக வசூலித்து சாதனை படைத்துள்ளது.

இதில் 1,023,207 மில்லியன் ரூபா வருமான வரியாகவும் 714,684 மில்லியன் ரூபா பெறுமதிசேர் வரியாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது, 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 392,669 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும் எனத் திணைக்களம் கூறியுள்ளது. (ச-இ)

## ஓய்வூதியத் தொகை 30 பில்லியன் நிலுவை

கொழும்பு, ஜன.5

1992 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைப்பணம் 30 பில்லியன் ரூபா இன்னமும் வழங்கப்படாமல் இருப்பதாக பொது நிர்வாக அமைச்சர் அபயரத்ன தெரிவித்துள்ளார். ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆறு லட்சம் ஓய்வூதியர்கள் இந்த நிலுவைத் தொகைக்கு உரித்துடையவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## மாணவர்களிடையே சுவாசநோய் அபாயம்



கொழும்பு, ஜன. 5

புதிய கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சுவாச நோய்களின் அபாயத்தைக் குறைக்க தடுப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துமாறும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)



## ஒன்லைன் ஊடாக 'லைசென்ஸ்'

கொழும்பு, ஜன. 5

விநியோகிக்கப்படாதிருக்கும் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரங்களையும் ஒன்லைன் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன இதற்கான நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்டுள்ளார். தேங்கிக்கிடக்கும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் யாவும் இம்மாதம் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,6)



## அமெரிக்கத் தூதுவராக மஹிந்த சமரசிங்க நீடிப்பு

கொழும்பு, ஜன. 5

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக மஹிந்த சமரசிங்கவே தொடர்ந்து பதவி வகிப்பார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த அரசாங்கத்தினால் அரசியல் காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் 16 பேரைத் திருப்பியழைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது. எனினும் சர்வதேச நாணயநிதியத்துடன் தொடர்ந்து பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதன் காரணமாக, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக மஹிந்த சமரசிங்கவே தொடர்ந்து பணியாற்றுவார் என வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

யாழ்/ கைதடி மாகாண சபைக்குமுன்பாக A9 வீதிக்கு மிக அருகாமையில் 40 பேர்ச் காணியில் அமைந்த 20'x 17' சகலவசதிகளுடன் கூடிய கடை வாடகைக்குண்டு. நிறுவனங்கள், உணவகங்கள் நடத்துவதற்கு உகந்த இடம்/ மாணவர்களுக்கு, வேலை செய்வோருக்கு தங்குமிடமாகவும் பயன்படுத்தலாம்.

**078 567 9674 , 076 987 0346**

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

## கடை வாடகைக்கு

புன்னாலைக்கட்டுவன், புத்தூர் பிரதான வீதியில் ஈவினை பிள்ளையார் வீதிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் கடை வாடகைக்கு உண்டு. Food City, Bank, Office, Sales Company போன்றவற்றை நடாத்துவதற்கு உகந்தது. அல்லது Fancy Shop, Parmacy, Beauty Parlour, Grocery போன்றவற்றை நடாத்த விரும்புவர் களுக்கு கடை பிரித்துக்கொடுக்கப்படும்.

(CS/57117) J-1

**076 725 0329, 077 163 5026**

## ஆசிரியர் உடன் தேவை

தேசிய பாடத்திட்டத்திற்கான மாதிரி வினாத்தாள்கள் உருவாக்கக் கூடிய ஆசிரியராயின் உடனடியாக எம்மைத் தொடர்புகொள்ளவும்.

**தரம் : 6 - 11**

பாடங்கள்:
விஞ்ஞானம் , கணிதம் , தமிழ் இலக்கியம்,வரலாறு மற்றும் தொழில்நுட்பம்

Call / WhatsApp +94 70 454 6424 (Yadurshika) or +94 70 104 6702 (Vidya)

## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மிகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- **077 281 1234**

(CS/2177) J-1

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
O/L, A/L கலைப்பிரிவு வகுப்புகள்
நடைபெறுகின்றன. சிறந்த ஆசிரியர்கள் குழாம்
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை.

**Tel : 077 675 1649**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

வட்டுக்கோட்டை - தெல்லிப்பளை வீதியில் யாழ்ப்பாணக் கல்லூரி. அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றிற்கு அண்மையில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 855 7587, 077 943 4738**

## மணமகன் தேவை

1999, இந்து, உத்தரட்டாதி, SOFTWARE ENGINEER
பூர்வீகம் - துன்னாலை, வதியுமிடம் - பருத்தித்துறை
மணமகள் பதிவு இல: 11355.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

(CS/29568B) J-1

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதியில் (கோப்பாய் வீதியில் இருந்து 5வது காணி) வீட்டுடன் கூடிய 7 பரப்பு 15 குளியுடன் (8 பரப்புக்கு 3 குளி குறைவு) காணி விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(CS/57102) J-1

**077 732 8583, 077 412 1657**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி, நெல்லி, முருங்கை, பப்பா, பொமிளேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா, கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## மணமகள் தேவை

1996, இந்து, அனுசம், PROCESS TECHNOLOGIST
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - LONDON
மணமகன் பதிவு இல: 11350.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

(CS/29568A) J-1

## ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

### English Classes for Adults

**Easiest and quickest way to learn English language skills.**

1. Spoken
2. Written
3. Reading
4. Listening
5. Preparation for
   a. IELTS Life Skills
   b. Academic
   c. General

Commencing from 08.01.2025 In Jaffna & Manipay

Duration: 1 year
Registration: Rs.2000/=
Course fee: Rs.50000/=

The certificate will be issued based on an exam after the completion of the course.

Jaffna - 5.00 pm - 7.00 pm (Tuesday&Thursday & Friday)
Manipay - 9.00 am - 11.00 am (Monday, Wednesday & Friday)

**For more information visit:**

ANGEL INTERNATIONAL SCHOOL, NO.17. RASAVINTHODDAM, JAFFNA.

ANGEL INTERNATIONAL SCHOOL MATHERS LANE MANIPAY.
021-225-5628 / 0773068997 / 0775435968

## Angel International School

Manipay Jaffna Chavakachcheri

Admissions available for Classes from 3+ to A/L for the Academic Year 2024/2025 from 7th January 2025.

| School Location | Available Classes | Contact Number |
|---|---|---|
| Manipay | 3+ to A/L | 0777238300 |
| Jaffna | 3+ to Grade 6 | |
| Chavakachcheri | 3+ to Grade 6 | |

Please call us for more information.

-School Administration

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை

மானிப்பாய் யாழ்ப்பாணம் சாவகச்சேரி

3+ தொடக்கம் உயர்தரம் வரையான 2024/25 கல்வியாண்டுக்குரிய அனுமதிகளை ஜனவரி 07, 2025 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

| பாடசாலை | வகுப்புக்கள் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| மானிப்பாய் | 3+ to A/L | 0777238300 |
| யாழ்ப்பாணம் | 3+ to Grade 6 | |
| சாவகச்சேரி | 3+ to Grade 6 | |

மேலதிக விபரங்களுக்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்

- பாடசாலை நிர்வாகம்

(cr.44031) (N-1)

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

### Jaffna International Trade Fair

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

15th EDITION

வருகை

JITF 2025

15TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JANUARY ஜனவரி

**24 25 26**

10.30மு.ப - 8.30பி.ப

Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
(Next to Jaffna Fort) (யாழ் கோட்டைக்கு அருகில்)

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER
GOLD SPONSORS
SILVER SPONSORS
OFFICIAL SPONSORS

+94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை மின்திட்டத்துக்காக பயன்தரு மரங்கள் அழிப்பு!

## மன்னார் மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தம்



**மன்னார், ஜன.5**

**மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடுப் பகுதியில் காற்றாலை மின்சாரத்துக்கான கடற்கரை வீதிப்புனரமைப்பு வேலைத்திட்டத்தின்போது பயன்தரு மரங்கள் வேரோடு பிடுங்கி வீசப் படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**


கடந்த காலத்தில் மன்னாரில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது பல நூற்றுக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கின. வீதிப் புனரமைப்புக்காக கடற்கரையை அண்டிய பகுதியில் மணல் அகழப்பட்டு வருவதுடன் ஆயிரக் கணக்கான பயன்தரு மரங்கள் அடியோடு பிடுங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய செயற்பாடுகள் மண்ணரிப்பை ஏற்படுத்தும். அத்தோடு கடல்நீர் கிராமத்துக்குள் புகும் அபாயமும் ஏற்படும். இதுகுறித்து பிரதேச மக்களால் மன்னார் பிரதேசச் செயலாளர், மன்னார் பிரஜைகள் குழு மற்றும் அருட்தந்தையர்களின் கவனத்துக்கு கொண்டுசெல்லப் பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அங்கு விரைந்த அவர்கள் நிலைமையை அவதானித்ததோடு, குறித்த வேலைத்திட்டத்தை உடனடியாக இடைநிறுத்துமாறு அறிவுறுத்தினர்.

அதனையடுத்து அங்கு வருகைதந்த பணியாளர்கள் திரும்பிச் சென்றதோடு குறித்த வேலைத்திட்டமும் இடைநிறுத்தப்பட்டது. (ச-56,60)



வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களக் கட்டடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நிகழ்வில் பங்கேற்று அதனைத் திறந்துவைத்தார். நிகழ்வில் வடமாகாணப் பிரதம செயலாளர், வடமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், வடமாகாண மாவட்டச் செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-113-214)



திருகோணமலை

## மாணவர்கள் படுகொலை 19 ஆம் ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், ஜன.5

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பங்கேற்றார். நினைவுரையை மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ் மணி நிகழ்த்தினார். (ச-25,66)



## காணிப்பிரச்சினைகள் மன்னாரில் நடமாடும் சேவை

மன்னார் , ஜன. 5


மன்னார் மாவட்டத்திலுள்ள காணிப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் நடமாடும் சேவை வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தலைமையில் மன்னார் மாவட்டச்செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது புலவுக்காணிகளில் அமைக்கப்பட்டுள்ள அரச கட்டடங்கள், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவையின்மை, அதுதொடர்பில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பன குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (ச-25,60)

## திறன்மேம்பாட்டு கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம், ஜன. 5

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் வரணிக் கலாசார மத்திய நிலையத்தில் சங்கீதம், நடனம், சித்திரம், மிருதங்கம், ஓகன் மற்றும் சிங்களம் ஆகிய வகுப்புகள் நடத்தப் படவுள்ளன. கற்கைநெறியை கற்க விரும்பும் மாணவர்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் மேற்கொள்ளலாம்.

பதிவுக்கட்டணம் 500 ரூபா எனவும் 2025 ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்கைநெறியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,159)







## பரிசளிப்பு நிகழ்வு

வவுனியா , ஜன. 5

வவுனியா வடக்குப் பிரதேசசபையால், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு வவுனியா வடக்குப் பிரதேசசபை உப அலுவலகத்தின் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பிரதேசசபையின் வெளியீடாக, 'தூரிகை' எனும் நூலும் வெளியிடப்பட்டது. சபையின் செயலாளர் திருமதி சோ.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்டப் பிராந்திய உள்[illegible]யாளர் தெ.ரதீஸ்வரன் கலந்துகொண்டார். (ச-26)

அரசியல் தலையீடுகளாலேயே

## பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவில் முடக்கநிலை!

வவுனியா, ஜன.5


295 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வவுனியா பொருளாதார மத்திய நிலையம் சில அரசியல் தலையீடுகள் மற்றும் தனிப்பட்ட நலன்கள் ஆகியவற்றாலேயே திறக்கமுடியாமல் உள்ளது. இதனைத் தடுத்து பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார். வவுனியா அபிவிருத்திக் குழுக்கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த மாத நடுப்பகுதியிலே இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோருடன் இணைந்து இது தொடர்பாகக் கலந்து ரையாடுவதுடன், இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தைப் திறப்ப தற்கான நடவடிக்கை அடுத்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் - என்றார். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 25.02.1949 | மறைவு 03.01.2025

**அமரர் நயினையூர் சின்னத்துரை ஜெகநாதன்**

கண்ணில் உயிரை வைத்துக்கொண்டு
இன்று காற்றில் கலந்துவிட்டாய்
இந்த மண்ணில் உன்னைப் போல்
இனி யாரை நாங்கள் காண்போம்
விண்ணில் நட்சத்திரமாய் மின்னும்
பிரிந்த உயிர் - என்று
பிறர் சொல்லி கேட்டதுண்டு
உன்னை எந்த விண்மீனாய்
நாம் என்று காண்போம்.

ஆத்மசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆற்றொணாத்துயரத்துடன் ஆழ்ந்து வெதும்புகிறோம்.

பிரிவுத் துயரில்
**இராமநாதன் கோபாலபிள்ளை குடும்பத்தினர்**
**(குஞ்சி ஐயா குடும்பத்தினர்.)**

(CS 2203) A-

# வீடு வாடகைக்கு

யாழ் நகர் வண்ணார்பண்ணை
இல. 57, B.A தம்பி வீதியில் 4 பேர்
கொண்ட சகல வசதிகளுடன்,
பிராமணர் குடும்பம் வசிக்கக்கூடிய
வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.

**021 222 4973, 074 384 4345**

(CS/57127) J-1

# MK VISA WORLD (PVT) (Ltd)

**U.K Work Permt**

ILTS, with out ILTS, NEWZEALAND visit visa, Work Permit, Australia vist VISA, Europe visit VISA

- கங்கேரி
- பல்கேரியா
- ருமேனியா
- செலவாக்கியா

அனைத்து நாடுகளுக்குமான visit VISA

தொடர்புகளுக்கு:

watsapp: **074 035 2940** | T.P: **070 254 3733**

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 20.07.1947 | விண்ணில் 02.01.2025

எமது யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரியின்
விரிவுரையாளர்
**திரு.ஜேம்ஸ் மேசன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்,
**எலியாஸ்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்கெடுப்பதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

## வேலையாள் தேவை

காணி துப்பரவு வேலை செய்யக்கூடியவர் தேவை. **இடம்:** நல்லூர் கொக்குவில். **சம்பளம்:** 2500 ரூபாய், மதிய உணவு
**தொடர்பு: 077 993 8699**

## பணிப்பெண் தேவை

வீட்டுவேலை செய்வதற்குப்
பணிப்பெண் தேவை.
(தங்கிநிற்பவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு:
**077 3696 714, 077 049 2210**

## காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி சந்நிதி வீதி
வீரபத்திரர் கோவிலடியில்
6 பரப்பு தோட்டக் காணி
விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**076 882 8694, 077 411 8851**

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/2197) J-1

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் உரும்பிராய்
வீதி- 2, 1 $^{3}/_{4}$.
1 பரப்பு - 40 லட்சம்
திருநெல்வேலி தபால்பெட்டி
சந்தி - 1 பரப்பு 5.36 குளி

தொடர்புகளுக்கு:
**077 104 8865**

(CS 2193) A-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 07 . 1947 | மறைவு 02 . 01 . 2025

**எலியாஸ்பிள்ளை அந்தோனிப்பிள்ளைளை**
**(எலியாஸ் அன்ரன்)**

குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எலியாஸ்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் (02.01.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் செபமாலை மரியையின் அன்புக் கணவரும், ஜேம்ஸ் மேஷன் (விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி), லெபோன் ஆபிரகாம் (கனடா), பிலிப்றோச் (மௌலின்), கிளன்பேட், பாஸ்கனா, வளர்மதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தலூசியா, பூரணி (கனடா), டொறின், சத்தியா, டயஸ், றோக் இளவேந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.01.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 02.30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருபலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

**இல: 32, தண்ணீர்த் தாங்கி வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்**

தகவல்:
**குடும்பத்தினர்**
**076 685 9061**

# வீடு வாடகைக்கு உண்டு

பரமேஸ்வரா சந்தி இராமநாதன் வீதியில்
அமைந்துள்ளது. சகலவிதமான
வசதிகளுடன் கூடிய வீடு

தொடர்புகளுக்கு:
**077 411 8851, 076 882 8694**

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சண்முகலிங்கம்



தோற்றம் 10.12.1944 | மறைவு 04.01.2025

மடத்தடி கிழக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகலிங்கம் நேற்று (04.01.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- தங்கமுத்து தம்பதியின் அன்பு மகனும், தனலட்சுமி அவர்களின் அருமைக் கணவரும், அமிர்தவல்லி, சுந்தரவல்லி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசலிங்கம் செ.அருளானந்தபூபதி, காலஞ்சென்ற தி.விமலேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், செ.கேதீஸ்வரி, செ.சிறீகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மடத்தடி கிழக்கு,**
**சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 44044) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23.09.1937 — மறைவு 18.12.2023

### கந்தையா மகாதேவா

மெய்யால் எம்மை விட்டுச் சென்ற நீங்கள்
ஆறாத ரணங்களாய்
நினைவுகளில் எம்முள் உறைந்தே இருக்கிறீர் ஐயா !

உங்களைப் போன்ற ஒரு நல்லுறவு இனி எங்களுக்கு ஏது?
இனி பிறவி ஒன்றிருந்தால்
மீண்டும் உங்கள் வீட்டில் நாமெல்லாம் ஒன்றாய் வாழ
எம்மை ஈன்றிடும் வரம் வாங்கி வாருங்கள் ஐயா....

ஆண்டொன்று ஆகியும்
உங்கள் அன்பான கதைகளையும்
அழகான முகத்தையும்
காணத் துடிக்கும் உங்கள் **குடும்பத்தினர்.**

**பூநாறி ஒழுங்கை,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

(cs 57125 (N-1)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.07.1943 — இறப்பு 05.01.2015

### அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

(நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே - சென்றீர்கள்
ஆண்டுகள் பத்து பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றி பணிந்திடுவோம்.

**மனைவி - மலர்மாலை**
**கனகசிங்கம்.**

(CS 29553 ) (N -1)


## நிமோனியாவால் ஒருவர் இறப்பு!

யாழ்., ஜன. 5

நிமோனியா காய்ச்சல் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யுவானிஸ் நேசராசா (வயது-42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் புன்னாலைக் கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30ஆம் திகதி காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த அவர், கடந்த மூன்றாம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(ம-26)


## மரண அறிவித்தல்



### ஆச்சியம்மா செல்லத்துரை

பிறப்பு 26.01.1930 — இறப்பு 30.12.2024

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு மற்றும் லண்டன் Harrow வசிப்பிடமாகவும் கொண்ட ஆச்சியம்மா செல்லத்துரை அவர்கள் கடந்த 30.12.2024 திங்கட்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2025) Golders Green Crematorium 62 Hoop Ln, London NW11 7NL, UK பார்வைக்கு வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக லண்டன் நேரப்படி முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/57129) J-1

## பயிற்றப்பட்ட பெண் பராமரிப்பாளர் மற்றும் தாதிய உதவியாளர் தேவை

**ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு** பயிற்றப்பட்ட பெண் பராமரிப்பாளர் மற்றும் தாதிய உதவியாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

(cs 57118) (N-1)

**021 226 5551, 077 810 6857, 077 154 2067**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மல்லாகம் K.K.S Road இல் அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு 2.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன்.

(CR/44039) J-1

**076 744 8099**

## வேலைவாய்ப்பு

பெட்டாவில் இயங்கும் மொத்த விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனையாளர், விற்பனை முகாமையாளர் மற்றும் கணினி சிட்டை தயாரிப்பாளர் உடன் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

(CR/44040) J-1

**077 143 4333**

## வெள்ளவத்தை Apartment

விடுதி ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலை ஆட்கள் தேவை

Telephone Operators - Girls
School Leavers or 1 Year Experience
Boutique Hotel Manager 2 years Experience
வரவேற்பு முகாமையாளரும்,
வீட்டு துப்பரவு பணியாளர்களும் தேவை

Field Workers (ஆண்கள்)
1 year sales Experience
with Bike licence

வயதெல்லை : 18 - 45

உங்கள் CVயை Whatsapp செய்யவும்

தொடர்புகளுக்கு: **077 048 26 64**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. தணிகைக்குமரன்**
அவர்களின் அன்புத் தாய்

### தங்கராசா சரஸ்வதி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs 57128) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 08 . 1950



மறைவு 02 . 01 . 2025

## கணபதிப்பிள்ளை கமலராசா

ஆத்திசூடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கமலராசா அவர்கள் கடந்த (02.01.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரி (ராசா) அவர்களின் அன்புக் கணவரும், சர்மிளா (பிரன்ஸ்), சிறீதரன், பர்மிளா (பிரன்ஸ்), சுதன், கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், நாகராசா, பரமராசா மற்றும் யோகநாதன் (கனடா), மனோகரன் (பிரான்ஸ்), தகமணி (கனடா), லீலாவதி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராசா, இராயேஸ்வரி, நாகராசா (பிரன்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சிவகுமார் (பிரான்ஸ்), சிவம் (பிரான்ஸ்), றாஜினி, மயூரி, கஜந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்ஞை, சஜித், சஜின், சியா, பினுசியன், பிறின்சியன், திசான், திசானி, நிக்கி, சர்மி, சயந்திகா, தனுசியன், டினுசியன், வினோத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**சோம றோட்,**
**தாவடி தெற்கு, தாவடி.** (CR/57109) J-1

**தகவல்: குடும்பத்தினர்**
**077 361 6134**

# மரண அறிவித்தல்



## அசுபதி கனகம்மா

ஆனந்தா வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அசுபதி கனகம்மா நேற்று (04.01.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அசுபதியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், ராசம்மா, மனோன்மணி, அப்புலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவறஞ்சினி, சுகந்தினி, சர்வேந்திரன், சுதாயினி, ஜெகதாயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயராஜசிங்கம், பரமசிவம், கலையரசி, யசோதரன், ராஜகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கீதா, பிரமிலன், அஜானன், மலரவன், பிரவீன், சஹானா, பிரகதி, அபினேஷ், தனுஜன், ஜனுஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 452 7731**
(CS 2202) A-1

## TVS சாவகச்சேரி ASIA TVS இல் மாபெரும் பொங்கல் திருவிழா

**சாவகச்சேரி ASIA TVS இல் பொங்கல் தினத்தை முன்னிட்டு TVS மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்து பெறுமதியான பரிசில்களை இலவசமாக பெற்றிடுங்கள்.**




- 5 வருட உத்தரவாதம்
- 2 Free சேவிஸ்
- குறைந்த ஆரம்ப கட்டணம்
- குறைந்த ஆவணங்களுடன் லீசிங் வசதி
- உதிரி பாகங்களுக்கு விசேட விலைக்கழிவு
- TVS டயர் - 3000ரூபா விலைக்கழிவு
- Free Tool Kit
- Free Insurance

**A9 Road, Chavakachcheri**
**Contact No -**
**0777650115, 0772376851, 0212052898**

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மர் அகதிகளை திருப்பியனுப்பல் சரியல்ல

## சட்டத்தரணி அம்பிகா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 5

**அகதிகள் அல்லது புகலிடக்கோரிக்கையாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்ளக்கூடிய அபாயம் உள்ள நாட்டுக்கே வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பக்கூடாது எனும் சர்வதேச அடிப்படைச் சட்டத்துக்கு இலங்கை அரசு கட்டுப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் மியான்மரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

நாட்டை வந்தடைந்த குறித்த மியான்மர் அகதிகளின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் அந்நாட்டு அரசாங்கத்திடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர்களை மீண்டும் நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். நாட்டை வந்தடைந்த அகதிகள் அல்லது புகலிடக்கோரிக்கையாளர்கள் அவர்களது சொந்த நாட்டில் முகங்கொடுக்கக்கூடிய அச்சுறுத்தல், உயிராபத்து என்பன தொடர்பில் முறையாக மதிப்பீடு செய்யாமல், அவர்களை அந்நாட்டுக்குத் திருப்பியனுப்பக்கூடாது. அவ்வாறு திருப்பியனுப்புவது அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவே அமையும் - என்றார். (ச-இ)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள **PPT** எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

01. முகாமையாளர்
02. காசாளர்
03. அலுவலக உதவியாளர்
04. பேருந்து நடத்துநர்

077 386 6250, 077 573 1318

சாரதி தேவை

யாழ். நகரில் வசிக்கும் சமூகத்தில் உயர் நிலையில் உள்ள ஒருவருக்கு அனுபவமும் நம்பிக்கையும் வாய்ந்த சாரதி ஒருவர் தேவை.

தங்கிநின்று பணிபுரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அனுபவத்தின் அடிப்படையில் 40,000 ரூபா தொடக்கம் 50,000 ரூபா வரையான ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 0771209998

சமூக ஊடக பதிவேற்றுநர் தேவை

சமூக வலைத்தளங்களில் அனுபவமும் நிபுணத்துவமும் மொழித் தேர்ச்சியும் கொண்டவர்கள் யாழ். நகரில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு உடனடியாகத் தேவை.

தகுதியும் ஆர்வமும் கொண்டோர் விண்ணப்பிக்கவும்.

(தூர இடத்தில் இருப்போருக்கு தங்குமிட வசதியும் வழங்கப்படும்)



தொடர்புக்கு: 0771209998

## பசு இறைச்சியாக்கல் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 5


சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்புப் பிரதேசத்தில் சினைப்பசுவைத் திருடி இறைச்சியாக்கி புதுவருடத்தன்று விற்பனை செய்த சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

புதுவருடத்துக்கு முன்தினம் வீட்டில் கட்டப்பட்டிருந்த சினைப்பசுவை காணவில்லை என உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணை களை மேற்கொண்ட பொலிஸார் தனங்கிளப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர். (ச-25, 28-125)



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்தவிஜயபால தலைமையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுடனான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. 'தூய இலங்கை' திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் பொலிஸாரின் நலன்புரி விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ச-25, 113)

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06.06.1930

மறைவு
05.01.2013

யாழ். மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். இல 16. மடம் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த

**வைத்தி கணபதிப்பிள்ளை**

அவர்களின் 12ம் ஆண்டு நினைவஞ்சலி.

ஆண்டு 12 ஆகிவிட்டது
ஆறவில்லை எம் துயர்
நிஜத்தில் நீங்கள் எம்முடன் இங்கில்லை
நினைவில் தினமும் எம்முடன் வாழ்கின்றீர்கள்
காலத்தால் எமை விட்டு நீர்ப் பிரிந்தாலும்
உம் நினைவு எமை விட்டுப் பிரியவில்லை
நாம் இங்கே தவித்து நிற்க
எமை விட்டுப் போன தெங்கேயோ?

அன்பில் உறைவிடமாய் ஆறுதலில் தந்தையாக
இன்சொல்லில் இனியவராக வாழ்ந்தவரே
வையகத்தே நீர் எமைப் பிரிந்து சென்றாலும்
வாடுகிறோம் இவ்வையகத்தில் நாமிங்கே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

குடும்பத்தினர்- கண்ணதாசன்
Burgdorf, Swiss.

(CS 2198) A-1

## முற்றவெளியில் குப்பை அகற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். முற்றவெளியில் சிதறிக்கிடந்த பொலித்தீன் பைகள் நேற்று அகற்றப்பட்டன. வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக புத்தாண்டை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த நடைபாதைக் கடைகளின் வியாபாரத்தினால் அங்கே பொலித்தீன்கள் அதிகளவில் பரவிக் காணப்பட்டன. அவற்றை மாநகரசபைத் தொழிலாளர்கள் அகற்றியுள்ளனர். (ச- 25, 17)

## 11 கிலோ தங்கத்துடன் 3 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 5

கற்பிட்டி பத்தலண்குண்டுவ கடற்பகுதியில் 11 கிலோ 300 கிராம் நிறையுடைய தங்கத்துடன் சந்தேகநபர்கள் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் 28 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த தங்கம் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இயந்திரப் படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

## போதனாசிரியர் வெற்றிடம் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையங்களில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், கணினி படவடிவமைப்பாளர், கணினி வன்பொருள் திருத்துனர் ஆகிய கற்கைநெறிகளுக்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கா.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் என்.வி.கியூ. 4 உடன் என்.வி.கியூ. 5 அல்லது அதற்கு மேல் தொழிற்தகைமை சான்றிதழ் வைத்திருத்தல், சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்துக்கு மேலான கற்பித்தல் அனுபவம் கொண்டிருத்தல் போன்ற தகைமைகளுடைய ஆர்வமுள்ளோர் தங்களது சுயவிவரக்கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி,அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு 02122 27949, 0710318737 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் ஆளுநரை நேற்று சந்தித்தார் இந்தியத் துணைத்தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன. 5

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுக்கும், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சிறி சாய் முரளிக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ். இந்தியத் துணைத் தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் உடனிருந்தார்.



வடக்கு மாகாணத்தில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட, முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் வடக்கு ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். புதிய ஆண்டில் இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை? என யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வடக்கு ஆளுநரிடம் கேட்டறிந்தார். (ம-66)

# பட்டாசு ஆலையில் வெடிப்பு ஆறு தொழிலாளர்கள் சாவு!

சென்னை, ஜன. 5

தமிழகத்தின் பட்டாசு ஆலையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் சிக்கி 6 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் பொம்மையாபுரத்தில் நீண்ட காலமாக இயங்கிவந்த பட்டாசுத் தொழிற்சாலையிலேயே இந்த வெடிவிபத்து சம்பவித்துள்ளது. உயிரிழந்த ஆறு பேரைத் தவிர, இன்னும் பலர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டாசுகளுக்கான வெடிமருந்துகளைத் தயாரிக்கும்போதே இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது. வெடிவிபத்தைத் தொடர்ந்து, பட்டாசுத் தொழிற்சாலையில் நான்கு அறைகள் தரைமட்டமாகியுள்ளன. மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

விபத்து எவ்வாறு சம்பவித்தது என்பது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. மேலதிக விசாரணைகளின் பின்னர் இதர தகவல்கள் வெளிப்படுத்தப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

## புதிய...

யொன்றை முன்வைக்கவுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவருமான சிறீகாந்தா தெரிவித்ததாவது:-

புதிதாகப் பதவிக்கு வந்திருக்கும் அரசாங்கம் ஒரு புதிய அரசியலமைப்பினை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வையும் இந்த அரசியலமைப்பு கொண்டிருக்கும் என்றும் அது கூறியிருக்கின்றது. இந்தநிலையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை புதிய அரசியலமைப்பு ஏற்று அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளை கூட்டாக முன்னெடுக்க தமிழர் தரப்பு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

இன்றைய அரசியல் சூழ்நிலை இதுவரை காலமும் இருந்திராத அளவுக்கு புதிய சவால்களை எமது மக்கள் முன் வைத்திருக்கின்றது. நீண்டகாலமாக தமிழ் மக்கள் அரசியல் நீதிகோரி நடத்தப்பட்டு வந்த சகல போராட்டங்களையும் அர்த்தமற்றதாக்குவதற்கு சிங்களப் பேரினவாதத் தரப்புகளால் நன்கு திட்டமிடப்பட்ட பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்தநிலையில் தமிழ்த்தேசியம் சார்ந்த சகல அரசியல் சக்திகளும் இணைந்து செயற்பட்டு எமது மக்களுக்கான அரசியல் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்த்தேசியக் கட்சிகள் தொடர்ந்தும் பிளவுபட்டு நின்றால் மீட்டெடுக்கமுடியாத ஆபத்துக்குள் தமிழ் மக்கள் சிக்குவதும் அவர்களின் அரசியல் உறுதி சிதைவதும் தவிர்க்கப்பட முடியாதவை ஆகிவிடும். ஆகவே இந்த நிலைமையை கருத்தில் எடுத்து உறுதியான அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த தமிழ்த்தேசியத் தரப்புகள் அனைத்தும் நேர்மையாகவும் உண்மையாகவும் முன்வரவேண்டும்.

ஒரே நாட்டுக்குள் தமிழ் மக்களின் தாயகத்துக்கு பூரண சுயாட்சி வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையின் பின்னால் தமிழ்த்தேசிய சக்திகள் அனைத்தும் விரைவாக அணிதிரள வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்த மிக முக்கியமான விடயத்தை ஆக்கபூர்வமாக கையாளும் விதத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஜனநாயக தமிழ்த்தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒரு பிரேரணையை தமிழ்த்தேசியக் கட்சி முன்வைக்கவுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்த்தேசியம் சார்ந்த சகல அரசியல் கட்சிகளோடும் கலந்தாலோசித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு அனைவரும் விரைவாக வரமுடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இந்த வழியில் நாம் அனைவரும் முதல் அடியை எடுத்துவைக்க முடியுமானால் ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்பதை ஏற்படுத்துவது அப்படியொன்றும் கடினமான காரியமல்ல -என்றார். (அ-ம-26)

## ஜனவரி...

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், கடந்த மாதம் இந்தியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அநுர, ஜனவரி மாதம் சீனாவுக்குச் செல்வதை உறுதிப்படுத்தியிருந்தார். எனினும், திகதி விவரங்கள் வெளிப்படுத்தப்படாமல் இருந்தன.

இந்த நிலையிலேயே, ஜனவரி மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை அவர் சீனாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகளும் சீனாவுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது சீன அதிபர் ஜின் பிங், சீனாவின் பிரதமர் மற்றும் சீன வெளிவிவகார அமைச்சர் ஆகியோரையும் ஜனாதிபதி அநுர சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். முக்கியமான ஒப்பந்தங்கள் சில இதன்போது கைச்சாத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## சீன...

உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர மேலும் தெரிவித்ததாவது:-

சீனாவில் பரவிவரும் மெட்டாப்நியூமோ வைரஸ் ஒரு ஆபத்தான பெருந்தொற்று அல்ல. அத்துடன், இது புதியவகைத் தொற்றும் அல்ல. 2001 ஆம் ஆண்டிலேயே இந்த வைரஸ் தொற்று அவதானிக்கப்பட்டுள்ளது. குளிர்காலத்தில் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதே அந்த வைரஸ் தொற்றின் உச்சக் கட்டப் பாதிப்பாகும்.

குளிர்காலத்தில் இவ்வாறான சுவாச நோய்கள் ஏற்படுவது வழமையானதாகும். ஆதலால், இது சீனாவிலோ அல்லது சீனாவுக்கு வெளியிலோ பொதுச்சுகாதார அவசர நிலைமைக்குக் காரணமாக அமையாது.

இதன் அறிகுறியாக இருமல், சளி அல்லது மூக்கடைப்பு, காய்ச்சல் மற்றும் தொண்டைப்புண் என்பன காணப்படும். எனவே, பொதுமக்கள் இந்த வைரஸ் தொற்றுத் தொடர்பில் பதற்றமடைய வேண்டிய அவசியமில்லை - என்றார். (அ-ம-இ)

## அரச...

அரசசேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், வெற்றிடமாகவுள்ள மிகவும் அத்தியாவசியமான பணியிடங்களுக்கு மட்டுமே அரசாங்கம் ஆட்சேர்ப்புச்செய்ய முடிவுசெய்துள்ளது.

ஏனெனில், அரசசேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சர்வதேச நாணயநிதியம் சில தடைகள் மற்றும் நிபந்தனைகளை விதித்துள்ளது. அதன் அடிப்படையிலும் செயற்படவேண்டிய தேவை இருக்கின்றது. நாட்டில் அரச சேவையில் சுமார் 15 லட்சம் பேர் இருந்தாலும், அரசியல் தேவைகள் காரணமாக பெரும்பாலானோர் ஒருசில இடங்களில் குவிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-இ)

## நாடாளுமன்றப்...

கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற ஊழியர்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் ஏற்கனவே பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகளின் பதவி உயர்வு முறைக்கு ஏற்பவே நாடாளுமன்ற அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுவது வழமை. எனவே அந்தப் பதவிகளுக்கு வெளியில் இருந்து அதிகாரிகளை நியமிப்பது எமக்கு அநீதி இழைக்கும் செயலாகும்.

அத்துடன், பொருளாதாரப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்ற ஊழியர்களின் விடுமுறைக் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எனவே, இவ்வாறான செயற்பாடுகள் எமக்குக் கடும் ஏமாற்றம் வழங்கும் நடவடிக்கையாகும் - என்றனர். (அ-ம-இ)

## புலமைப்...

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். எதிர்வரும் 12ஆம் திகதி அந்தப் பணிகள் நிறைவடையும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ம-இ)

## புளியம்...

குறியீடுகளோ, சமிக்ஞை விளக்குகளோ, மின்விளக்குகளோ பொருத்தப்படாமல் இருந்தது. அந்தப் பாலத்துக்குள் வீழ்ந்து இரண்டு இளைஞர்கள் உயிரிழந்ததையடுத்தே, சில பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, பாலத்தில் திருத்தல் பணிகள் இடம்பெறுகின்றன என்பதை வெளிப்படுத்தும் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பகுதியில் மின்விளக்கும் பொருத்தப்பட்டுள்ளது. (அ-ம-27)

## மின்சாரச்...

மின்துறை மறுசீரமைப்பு செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் புபுது நிரோஷன் ஹெடிகல்லகே குழுவின் செயலாளராகச் செயற்படவுள்ளார். எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் இந்தக் குழு தனது பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## கஞ்சாவுடன்...

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29, 34 மற்றும் 23 வயதுடையவர்கள். அவர்களில் ஒருவர் இரு தினங்களுக்கு முன்னர் அதே பொலிஸாரால் அதே பகுதியில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வளங்களைக் காக்க போராட்டத்தில் குதிப்போம்

## யாழ். மீனவர்கள் சூளுரை

**யாழ்ப்பாணம், ஜன. 5**

**புதிதாகப் பதவியேற்றுள்ள அரசு எங்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டாலும் கட்டை கொண்டு தாக்கினாலும் எங்களின் கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் முன்பாகப் போராட்டம் செய்வோம் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்ஸிஸ் ரட்ணகுமார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் வந்த பின்னர் நிறைய இழுவை மடிப்படகுகள் உள்நுழைந்து எங்களது வளங்களை அழிக்கின்றன.

கடந்த காலத்தில் நாங்கள் போராட்டத்தை நடத்திய போது, இந்திய இழுவைப் படகுகள் குறித்து தமது தலைவருக்கு உடனடியாகத் தெரியப்படுத்துவோம், நடவடிக்கை எடுப்போம் எனத் தற்போதைய கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்தார். இருப்பினும் கடற்றொழில் அமைச்சர் புதிதாக பதவியேற்ற பின்னரும் கூட நெடுந்தீவு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கடற் பகுதியில் இந்திய இழுவைப் படகுகள் எமது வளங்களைச் சூறையாடுகின்றன.

இவற்றை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவை எடுக்காவிட்டால், யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் செய்யும் மக்கள் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்னால் பெரும் போராட்டத்தில் குதிப்போம் - என்றார். (ச-27)

# காற்றுமாசு விழிப்புணர்வு மென்பொருள் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜன. 5

காற்று மாசு தொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவதற்கு ஏதுவாக புதிய செயலி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் சில பகுதிகளில் காற்றின் மாசு அதிகளவில் அவதானிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் வளித்தர சுட்டெண்களை தரவேற்றி அனைவரும் தொலைபேசியினூடாக பார்க்கக்கூடிய வகையிலாக இந்த மென்பொருள் வடிவமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# உள்ளூராட்சித் தேர்தல்

## விரைவில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 5

உள்ளூராட்சித் தேர்தல் குறித்து எதிர்வரும் வாரம் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதாயின் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை விரைவாகத் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க மேலும் கூறியுள்ளார். (ம-இ)

# துமிந்த சில்வாவுக்கு சலுகைகள் இல்லை

## சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5

உயர்நீதிமன்றத்தால் அண்மையில் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட துமிந்த சில்வாவுக்கு சிறைச்சாலை அதிகாரிகளால் விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 07 . 1948



மறைவு 04 . 01 . 2024

## திருமதி தேவராசா ரத்தினவதி

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராசா ரத்தினவதி அவர்கள் நேற்று (04.01.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - லீலாவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - யோகம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற தேவராசா (சாவகச்சேரி) வின் அன்பு மனைவியும், கைலைநாதனின் (Director Avon Group of Company) பாசமிகு தாயாரும், சுகுணா லக்ஷாயினியின் அன்பு மாமியாரும், சிவனுகாயினி (தரம் - 10, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கிருத்திக்ஷன் (தரம் - 08, புனித பரியோவான் கல்லூரி), சாருக்ஷன் (தரம்- 06, புனித பிரயோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம், செகராஜசிங்கம் மற்றும் கிருஸ்ணசிங்கம் (லண்டன்), பாமா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் துரைராஜா (கனடா), விமலாதேவி (வவுனியா), இந்திரராஜா (கனடா), இந்திராதேவி (ஜேர்மனி), சரோஜாதேவி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2025) திங்கட்கிழமை 7/3, புனித அன்னம்மாள் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: தே.கைலைநாதன் (மகன்)
076 5840297

## ஆண் உதவியாளர் தேவை

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
சம்பளம் :- 40,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.
Location :- S.A.W & Sons, Hambantota
Contact :- 077 480 3379

## காணி தேவை

A-9 வீதிக்கு அருகில் மதவாச்சிக்கும் வவுனியாவிற்கும் இடையில் or கனகராயன் குளம் பகுதியில் தேவை.
தொடர்புகளுக்கு: 077 929 5909
077 888 7051
011 700 6204
(CS 2195) A-1

## Physics Class (Day batch, 2025, 2026 batch)

பிரத்தியோகமாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். அலகு ரீதியான மீட்டல் மற்றும் Paper Class
தொடர்புகளுக்கு:
076 064 3450

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..
மேற்கத்தைய நாடுகளில் கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

## IELTS Academic / General / Ukvi

- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.
- IELTS, IELTS Ukvi பரீட்சைகள் British College இல் நடைபெறும்.
- முழுநேர வகுப்புக்கள் மற்றும் பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS, Ukvi Exam centre

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ் நகரில் இருந்து கோயில் வீதி (Temple Road) வரை பயணிக்கும் வீதியில் ராஜசிங்கம் விக்டர் ஸ்ரான்லி புஸ்பகுமார் (651781981V) மற்றும் ராஜசிங்கம் மேரி இமேல்டா என்பவர்களின் அடையாள அட்டைகளும், ATM காட், வாகன சாரதி அனுமதிப் பத்திரத்துடன் கூடிய வாகன ஆவணங்களும் சிறிய கருப்புநிற கைப்பையுடன் நேற்று முன்தினம் (03.01.2025) வெள்ளிக்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (CS/57123) J-1

076 825 6852, 077 905 9840

A/L பரீட்சையின் பின்னர்....
யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

## Diploma in Spoken English

- முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
- மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும், Listening, Reading & Writing இல் தேர்ச்சியடைவதற்கும் 100% உத்தரவாதம்.
- மாணவர்களின் ஆங்கிலறிவுக்கேற்ப பாடநெறிகள் Basic, Intermediate & Advanced எனத் தனியாக நடைபெறும்.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200
Kilinochchi. Tel : 021-4927114
Vavuniya. Tel : 024 -4930041
Vavuniya 2nd Tel : 024-4930042
Puthukkudiyiruppu. Tel : 021-2290933
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Kalmunai. Tel : 067-4300207
Mullaithivu.. Tel : 021-7284344
Mannar. Tel : 021-4332294

IDP IELTS, Ukvi Exam centre

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கை...டிங் அனுபவம் உள்ளவர்கள், உதவியாளர்கள், ரைப்செற்றிங் தெரிந்தவர்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் நேரில் சமுகம்தரவும்.
**நாவலர் அச்சகம்**
இல.637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
**077 833 8625 , 077 774 6855**

(cs.57122) N-1




**Adjustable Bed**
**புதியது**
கால் பக்கமும், தலைப் பக்கமும் உயரம் சரிசெய்யக் கூடியது.
Contact :
**021 222 5778, 077 437 1615**

## காணி விற்பனை

கிளிநொச்சி, கனகபுரம் பிரதான வீதியில் (கண்டி வீதியில் இருந்து 4கிமீ தூரம்) அமைந்துள்ள பெறுமதி வாய்ந்த உறுதிக்காணி. இயங்கு இலையில் உள்ள கோழிப்பண்ணையுடன் உடன் விற்பனைக்குண்டு.
நான்கு (04) ஏக்கர் உறுதிக்காணியில் 1.800 சதுர அடியில் அமைந்துள்ள ஏழு (07) கூடுகளுடன் 12.000 புறொய்லர் கோழிகளை வளர்க்கக் கூடிய பண்ணை. காணியின் மூன்று பக்கங்கள் மதில் கட்டப்பட்டு. இரண்டு அறைகளுடன் கூடிய வீடும் உள்ளது.
மேலும் விஸ்தரிக்கக் கூடிய நிலப்பரப்பினைக் கொண்டுள்ள பண்ணையில் மா. தேக்கு மரங்களுடன் புதிதாக நாட்டப்பட்ட தென்னை மரங்களுடன் மரக்கறி பயிர்செய்கையும் இடம்பெறுகின்றது.

(CS/28918) J-1

**+94 76 409 4 409**

05.01.2025 ஞாயிற்றுக்கிழமை

# 'நூறு மின்னல்கள்' நாவல் அறிமுக நிகழ்வு

'எங்கட புத்தகங்கள்' நிறுவனத்தினின் ஏற்பாட்டில் நான்காம் கட்ட ஈழப் போரில் கிழக்கில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களைத் தழுவி எழுதப்பட்ட மாயனின் 'நூறு மின்னல்கள்' நாவலின் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச–66)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோவில் வீதி - அம்மன் வீதியில் புத்தம் புதிய வீடு 1 1/2 பரப்பும் 1 1/2 குளியும் விற்பனைக்குண்டு.
- 3 அறைகள் - 2 இணைந்த குளியலறையுடன் 1 Open குளியலறை வசதி
- சுற்று மதில்
- முழுமையாக மாபிள் பதிக்கப்பட்டுள்ளது
- 2 கார்கள் நிறுத்தக் கூடிய இடவசதி

(cs.57119) N-1

**077 271 8249 / 075 670 1631**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் (மாதகல்) தங்கியிருந்து வீட்டு வேலைகளை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

(cs.57111) N-1

**076 762 2889 , 077 501 6255**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள். வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை. விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-

(CS/56843) J-1

Whats app:-
**+61 421 290 240**

## காணிகள் விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதியில் (Temple Road க்கு அருகில்) 1 1/4 பரப்பு காணி விற்பனைக்கு. மற்றும் கொழும்பு வெள்ளவத்தையில் 650. 840. 1350 Sqft Apartments, பம்பலப்பிட்டியில் 1150 Sqft Apt, தெஹிவளையில் 1200. 1740. Sqft 3BR Apartments, கல்கிசையில் 3p. 11p வீடுகள், காணிகள் விற்பனைக்குண்டு

தொடர்பு: **077 115 3715**

## பணிப்பெண் தேவை

நல்லூரில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டில் பணிபுரிய 40 - 50 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு:-

(CS/57114) J-1

**074 348 7910**

## தேவை

சனான் அல்லது சனான் கலப்பு ஆடுகள் விலைக்கு வாங்க தேவை.
தொடர்புகளுக்கு:-

(CS/57116) J-1

**077 247 4740**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V) 1991 இல் பிறந்த திருவோணம் 7இல் செவ்வாய் கிரகபாவம் 71 3/4 சொந்தமாக வியாபார நிறுவனம் வைத்திருக்கும் பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான பட்டதாரி மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தரகர் தேவையில்லை.

(CS/57108) J-1

**076 058 1753**

## NEW SCIENCE HALL

**KANNATHIDDY ROAD, JAFFNA**

### 2025 A/L Day Class

**கணித, விஞ்ஞானப் பிரிவுகள்**

**(2024 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)**
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை

| | | |
|---|---|---|
| COM .MATHS | - | P. செந்தில் நாதன் 7.30 - 9.30 am |
| | - | S. சிவகரன் 5.00 - 7.00 pm |
| BIOLOGY | - | V.S. குணசீலன் 8.00 - 9.30 am |
| CHEMISTRY | - | V.K. நந்தா |
| | - | P. லோகா 9.30-11.30 am |
| PHYSICS | - | G. பிரபா |
| | - | R. ராகுலன் 12.00-2.00 p.m |

**ஆரம்பம்: 06.01.2025 திங்கட்கிழமை**

நிகழ்நிலை (Zoom) வகுப்புக்களும் நடைபெறும்

தொடர்பு: 0777 917 611, 076 566 3006, 076 569 3006,
https: // facebook.com NEW SCIENCE HALL JAFFNA

## விற்பனைக்கு

- தேங்காய் எண்ணெய் ஊற்றும் இயந்திரம் - 01
- கொப்பறா வெட்டும் இயந்திரம் - 01
- தேங்காய் காயப்போடும் இயந்திரம் - 01

இவை அனைத்தும் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/44041) J-1

**076 839 3281**

## வேலையாட்கள் தேவை

கொழும்புக்கு அருகாமையில் கோழிப்பண்ணை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.
உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும்,
வயதெல்லை - 18 - 50.
சம்பளம் - 55000/-

(CS/57086) J-1

**070 777 7628**

## வேலைவாய்ப்பு

வடமாகாணத்தில் Pharmacy License, Pharmacists மற்றும் Assistant Pharmacist தேவை.

(CS/57124) J-1

**077 907 5753, 076 707 5272**

## வீடு வாடகைக்குத் தேவை

தற்போது யாழ் இந்துக்கல்லூரி வீதியில் வசித்து வரும் மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ் மாநகர, மேற்கு கொக்குவில் பகுதியில் மூன்று அறைகள் இணைந்த குளிப்பறை, சாதாரண வீடு வாடகைக்குத் தேவை. ஆங்கில ஆசிரியர்.

K.Ganesh B.A **077 766 8725**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகவும் 3பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- உடுப்பிட்டி சந்நிதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சந்நிதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

(CS/2184B) J-1

தொடர்பு:- **070 290 2338**
**076 017 1105**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னாவ தென்று பிடித்திரா — முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிரீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்

— நாலடியார்

Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை (05.01.2025) சிகரம் :234

நிலாந்தன்

# ௨௦௨௫:



# தமிழ் மக்களின் ஆண்டுப் பலன்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆதரவான தமிழ்ப் புத்திஜீவிகளில் சிலர் தமிழ்க் கிராம மட்டத்தில் விவசாய அமைப்புகளைச் சந்தித்து,விவசாயிகளின் குறைகளைக் கேட்டு வருகிறார்கள்.இன்னொரு பக்கம் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் சந்திரசேகர் தமிழ்ப் பகுதிகளில் கடற்றொழிலாளர் சங்கங்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் பிடியைப் பலப்படுத்தி வருகிறார்.கடந்த மாத இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில், தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான மற்றொரு குடிமக்கள் அமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. “மறுமலர்ச்சிக்கான மக்கள் இயக்கம்” என்று அழைக்கப்பட்ட அந்த அமைப்பை “மாற்றத்துக்கான மக்கள் அமைப்பு” என்று சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கிறார்கள்.அது யாழ் .ஊடக அமையத்தில் ஓர் ஊடகச் சந்திப்பையும் ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டை இப்பொழுது ஆளும் தேசிய மக்கள் சக்தி என்பது ஜே.வி.பி. உட்பட 21 அமைப்புகள் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு ஆகும். இந்தக்கட்டமைப்புக்குள் தொழிற்சங்கங்கள். இடது சாய்வுடைய அமைப்புக்கள், துறைசார் தொழிற்சங்கங்கள்,பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்புகள்,மாணவ அமைப்புகள்,மகளிர் அமைப்புகள், என்றிவ்வாறாக சமூகத்தின் பல்வேறு துறைகளை அல்லது பல்வேறு பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் உண்டு. இதில் இடதுமரபில் வராதவர்களையும் உள்ளீர்க்கத் தேவையான விரிவு, நெகிழ்ச்சி ஜே.வி.பி.யிடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பிரதமர் ஹரிணி ஜே.வி.பி. உறுப்பினர் அல்லர். வளமான குடும்ப பின்னணியைக் கொண்டவர். அவரைப் போன்றவர்களையும் உள்ளீர்க்கத்தக்க விரிவு ஜே.வி.பி.யிடம் ஏற்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி.யானது சீனச்சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி வந்தவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம்.அதனால் அந்த அமைப்பிடம் இடதுசாரி இயக்கங்களிடம் காணப்படும் பெரும்பாலான ஒழுக்கங்கள் உண்டு. அது இப்பொழுது நடைமுறையில் ஒரு கொம்யூனிஸ்ட் அமைப்பாக இல்லை.சீனக் கொம்யூனிஸ்ற் கட்சியைப்போலவே அதுவும் பெருமளவுக்கு தேசியவாதப் பண்புமிக்க ஒரு கட்சிதான்.ஆனால் கொம்யூனிஸ்டுகளிடம் காணப்படும் அமைப்பாக்க ஒழுக்கம் அவர்களிடம் உண்டு.அதைவிட முக்கியமாக தன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த அனுபவம் ஜே.வி.பி.க்கு உண்டு.இரண்டு தடவைகள் நசுக்கப்பட்ட அமைப்பு; இரண்டு தடவைகள் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு. அத்தனை அழிவுகளில் இருந்தும் மீண்டெழுந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் அந்த அமைப்புக்குண்டு. அதைவிட மேலதிகமாக இப்பொழுது கடந்த ஆண்டு பெற்ற இரண்டு தேர்தல் வெற்றிகளும் அவர்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்திருக்கின்றன.அதிலும் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் கிடைத்த வெற்றிகளால் அவர்கள் அதிகம் உற்சாகமடைந்திருக்கிறார்கள். எனவே தென்னிலங்கையில் இருப்பது போன்ற கட்டமைப்புகளை,வலைப்பின்னலை தமிழ்ப் பகுதிகளிலும் பரவலாக்க முயற்சிப்பார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்.பி.பி.யால் நிறுத்தப்பட்டு ஆசனங்களை வென்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஜே.வி.பி.யின் கொள்கை வழி வந்தவர்களோ அல்லது புரட்சிகரமான உள்ளடக்கங்களைக் கொண்டவர்களோ அல்லர். அவர்கள் தமிழ் மக்களுடைய போராட்டங்களிலும் காணப்பட்டதில்லை. கொழும்பில் ஜே.வி.பி. நடத்திய ஆபத்துகள் மிகுந்த போராட்டங்களிலும் காணப்பட்டதில்லை. இந்த விடயத்தில் வடக்கு கிழக்கில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது என்.பி.பி,ஏனைய தென் இலங்கை மையக் கட்சிகளைப் போலத்தான் செயற்பட்டிருக்கிறது. இதில் திருகோணமலையிலிருந்து தெரிவு செய்யப்பட்டவரும்,பதில் வெளிவிவகார அமைச்சராக இருப்பவருமாகிய அருண் ஹேமச்சந்திர ஓரளவுக்கு விதிவிலக்கு எனலாம்.


எனவே நாடாளுமன்றத்தேர்தலில் தன் வேட்பாளர்களைத் தெரிவதில் இருந்த பலவீனங்களை அடுத்தடுத்த தேர்தல்களில் இல்லாமல் செய்வதற்கு என்.பி.பி. முயற்சிக்கும். குறிப்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் என்.பி.பி.க்குச் சார்பான புத்திஜீவிகளின் அணி துடிப்பாகச் செயற்படுகின்றது.ஆனால் தமிழ் மாணவர்கள் மத்தியில் என்.பி.பி.க்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய பலமான கட்டமைப்பு கிடையாது.

2009க்குப் பின் ஒரு மூத்த ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் எனக்குச் சொன்னார், இலங்கைத் தீவிலேயே அதிகம் போராட வேண்டிய ஒரு பல்கலைக்கழகம் யாழ். பல்கலைக்கழகம்தான். ஆனால் போராட முடியாமல் இருப்பதும் அதே பல்கலைக்கழகம் தான்என்று. அவர் சொன்னது முழுவதும் சரியல்ல. 2009க்குப் பின் வந்த ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துணிச்சலாகப் போராடியிருக்கிறார்கள்.ஆனாலும் கடந்த சில ஆண்டுகளாக ஒரு சோர்வு காணப்படுகிறது.

குறிப்பாக,கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்புக்குள் பல்கலைக்கழக மாணவ அமைப்புகள் காணப்பட்டன.ஆனால் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பகிரங்கமாக களமிறங்கி செயற்படுவதற்கு மாணவர் அமைப்பு தயங்கியது.ஆங்காங்கே உதிரிகளாக அல்லது சிறு குழுக்களாக அவர்கள் பங்களித்திருக்கலாம். ஆனால் “பொங்கு தமிழ்”, அல்லது “எழுக தமிழ்” களுக்காக உழைத்ததுபோல பொது வேட்பாளருக்காக பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு சமூகமாகச் உழைக்கவில்லை.‘ நாங்கள் பொதுச் சபையை ஏற்றுக்கொள்கிறோம்;ஆனால் பொது வேட்பாளரை ஏற்கவில்லை’ என்ற ஒருவித நழுவலான நிலைப்பாடு அங்கே காணப்பட்டது. பொது வேட்பாளரை முன்னிறுத்திய கட்சிகளோடு இணைந்து செயல்படுவதற்கு அவர்களுக்குத் தயக்கம் இருந்திருக்கலாம்.அல்லது ஒரு தேர்தல் நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடுவதற்கும் அவர்கள் தயங்கியிருக்கலாம்.ஆனால் யாழ்.பல்கலைக்கழகமோ கிழக்குப் பல்கலைக்கழகமோ பொது வேட்பாளருக்கு ஆதரவாக மக்களைத் திரட்டும் பணியில் ஒரு மாணவ சமூகமாகத் தீவிரமாக,எழுச்சிகரமாகச் செயற்படவில்லை. அப்படித்தான் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கமும் புலமைசாரா ஊழியர் சங்கமும் பொது வேட்பாளருக்காக ஒரு சமூகமாக இறங்கிச் செயற்படவில்லை. ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் ஊழியர் சங்கமும் ஒப்பீட்டளவில் உற்சாகமாக இறங்கி வேலை செய்தன. ஆனால் பொதுவேட்பாளருக்காக அவ்வாறு உழைக்கவில்லை. புலமைசாரா ஊழியர் சங்கம் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக நின்றது.விரிவுரையாளர்களைப் பொறுத்தவரை அரசறிவியல் துறையின் தலைவராகிய பேராசிரியர் கணேசலிங்கம் தமிழ் மக்கள் பொதுச்சபையில் ஒரு அங்கம் வகித்தார்.

08





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

05 ஜனவரி 2025




பூகோள வெப்பமடைதலைத் தடுப்பதில்

# COP 29 காலநிலை மகாநாட்டின் தோல்வி

கலாநிதி. எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் பற்றிய சமவாயச் சட்டகத்தின் 29 ஆவது அரசுத் தலைவர்களின் மகாநாடு 2024 நவம்பர் 24 ஆம் திகதி சுவட்டு எரிபொருளின் பிரதான உற்பத்தி நாடான அஜர்பைஜானின் பக்கு நகரில் இடம்பெற்றது. எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு, குறிப்பாக பூகோள வெப்பமடைதலைத் தடுப்பதற்கு பூகோள இலக்கினை வழங்கும் என COP 29 எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதனைச் செய்யத் தவறிவிட்டதுடன் காலநிலை நிதி தொடர்பான ஏமாற்றமளிக்கும் முடிவுகளுடன் மகாநாடு முடிவடைந்தது. இதுதொடர்பான முக்கியமான விடயங்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

1

1992 இல் பிறேசிலின் றியோடி ஜெனிரோவில் இடம்பெற்ற மகாநாட்டில் உருவாக்கப்பட்டுள்ள 21ஆம் நூற்றாண்டின் நிலைபேண் அபிவிருத்திக்கான மாதிரி வரைபொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள றியோ பிரகடனம், காலநிலை மாற்றம் பற்றிய சமவாயம், உயிரினப் பல்வகைமை பற்றிய சமவாயம், காடுகள் பற்றிய தத்துவம், நிகழ்ச்சி நிரல் 21 ஆகிய அம்சங்களில் ஒன்றான "ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் பற்றிய சமவாய வரைச்சட்டகம்"(Framework Cnovention no Cilmate Change UNfCCC) என்பதுடன் தொடர்பான ஒரு சர்வதேச உடன்படிக்கையே கியோட்டோ பின்னேடாகும். ஒப்பந்தம் 1997 ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் திகதி யப்பானில் கியோட்டோ நகரில் கைச்சாத்திடப்பட்டது.

பூகோள வெப்பமடைதலைக் கவனத்திற்கொள்ளாது பல்வேறு கருத்து வேறுபாடுகளின் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட மிகவும் பலவீனமான தொரு ஆவணமாக இது கருதப்பட்டது. 1990 இல் காணப்பட்ட பச்சை வீட்டு வாயு வெளியேற்ற மட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு நாடும் எவ்வளவு குறைப்பினை மேற்கொள்ளவேண்டும் என்பதை கியோட்டோ பின்னேடு உறுதிசெய்தது. குறைப்பினை மேற்கொள்வதற்காக 6 பச்சைவீட்டு வாயுக்கள் தெரிவுசெய்யப்பட்டன. அவை காபனீரொட்சைட், மெதேன், நைதரசனொட்சைட், ஹைட்ரோ புளோரோ காபன்கள், போர்புளோரோ காபன்கள், சல்பர் ஹெக்சாபுளோரைட் என்பனவாகும். பூகோள வெளியேற்றங்களில் 61.6% கொண்டிருக்கும் 163 நாடுகள் இவ் ஒப்பந்தத்தைப் பின்னுறுதிப்படுத்தி இருந்தன. வாயுக்களின் வெளியேற்றத்தினை உறுதிநிலையில் பேணுவதற்கு இவ் ஒப்பந்தம் முதற்படியாகக் கருதப்பட்டது. ஒப்பந்தத்தின்கீழ் ஒவ்வொரு நாடும் தேசிய நடவடிக்கைகள் மூலம் இலக்குகளை அடைந்துகொள்ளவேண்டும். ஆனால், இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக கட்டுப்பாடற்ற முறையில் இடம்பெற்றுவந்த நிலக்கரி., நிலநெய் பயன்பாட்டினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் குறைப்பதற்கு இவ் ஒப்பந்தம் போதுமானதாக இருக்கவில்லை.

(தொடரும்)






# நோய்காரப் பெருமக்களே!

*வணக்கம்.*

பால்காரப் பரமசிவம் காலையிலே வந்தவர். வரேக்கையே "அன்னமுத்து இண்டைக்குக் கிளினிக் போற நாள் எண்டு சொன்னனி. போகேல்லையோ?" எண்டு கேட்டுக்கொண்டே வந்தார். பரமசிவத்தில ஒரு பழக்கம். ஆரும் ஒண்டைச் சொன்னால் சொன்னவர் மறந்தாலும் அந்தாள் மறக்காது. இப்ப அடியேன் கிளினிக்குக்குப் போறதில்லை. சலரோகம்தானே எண்டிட்டுப் பக்கத்தில உள்ள டாக்குத்தரிட்டைப் போய்க் காட்டிப்போட்டு மருந்தைப் பார்மஸியிலேயே வேண்டிப்போடுவன். ஏதேனும் சோதிக்கவேண்டிவந்தால் அதையும் பக்கத்தில உள்ள ஆய்வுகூடத்தில சோதிச்சுப் போட்டு ரிப்போர்ட்டைக் காட்டி மருந்தை எழுதி வேண்டிக்கொண்டு பார்மஸியோடை அலுவலை முடிச்சுப்போடுவன். அது வலு சுகம். ஆஸ்பத்திரிக்குப் போய்நிண்டு காயிறதுக்குப் பத்தாது. முந்தி மாதிரி இல்லை, இப்ப அடிக்கடி களைப்பு வருகுது எண்டு சொன்னன்.

கதைக்குக் கதை அதென்ன ஆய்வுகூடத்தில சோதிக்கிறது எண்டு சொன்னனி. அது எனக்கு விளங்கேல்லை எண்டு பரமசிவத்தார் கேட்டார். நீ எங்கையேன் வெளிக்கிட்டுத் திரிஞ்சால்தானே! ஆஸ்பத்திரியோட அலுவலை முடிக்கிற உனக்கு வெளியால என்ன நடக்குது எண்டு தெரியுமோ? முந்தி எல்லாத்துக்கும் யாழ்ப்பாணம் பெரியகடைப் பக்கமாத்தான் போகவேணும். இப்ப எல்லாம் காலுக்க வந்திட்டுது. ஆய்வுகூடம் எண்டால் மலம், சலம், இரத்தம், பிரஸர் எண்டு எல்லாத்தையும் அங்கையே சோதிக்கலாம். இப்ப முழத்துக்கு முழம் பலசரக்குக் கடையள் சுப்ப மாக்கெட் எண்ட பேரிலை எல்லா இடத்திலையும் வந்ததைப் போல இந்த ஆய்வுகூடங்களும் வந்திட்டுது. ஆனால் ஒண்டு சொல்லுவன் , இது எல்லாம் சட்டத்துக்கு அமைவா இருக்கோ எண்டதிலை எனக்குச் சமசியம் இருக்கு!'



இப்பிடி இரண்டுபேரும் கதைச்சுக்கொண்டு இருக்கேக்கை என்ர பேரன் ' கான் போனோட' வந்து சொன்னான் "இரண்டு பேரும் இப்ப பார்மஸியளைப் பற்றியெல்லே கதைச்சனியள்? இப்ப கன பார்மஸியளுக்கு மூடுவிழா நடக்கப் போகுது பாருங்கோவன்."

"என்னடா பேரா? கோதாரியை விளக்கமாச் சொல்லன் எண்டன்." கொஞ்சம் பொறுங்கோ எண்டு சொல்லிப்போட்டு அந்தச் செய்தியை மூச்சுவிடாமல் வாசிச்சான்.

அவசரமா ஒரு கடுதாசி

'தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் புதிய சட்டதிட்டங்கள் காரணமாக நாடு முழுவதும் பல்வேறு தனியார் மருந்தகங்கள் மூடப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் தனியார் மருந்தகம் ஒன்றைப் பதிவுசெய்வதற்குத் தகுதிவாய்ந்த மருந்தாளர் ஒருவரின் பதிவுச் சான்றிதழ் மட்டும் தேவை. இந்நிலையில், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையானது மருந்தகங்களின் செயற்பாட்டுக்கு தகுதிவாய்ந்த மருந்தாளரின் முழுநேர இருப்பைக் கட்டாயமாக்கியுள்ளது.தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின்படி, மருந்துகள், மருத்துவ சாதனங்கள் அல்லது தயாரிப்புகளை விநியோ கிப்பது ஒரு மருந்தாளர் அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட பயிற்சி மருந்தாளரால் தலைமை மருந்தாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்'

எண்டுதான் அந்தச் செய்தி இருக்கு.

இதுக்கு மருந்துக்கடைச் சங்கம் ஒரு கோரிக்கையை வைச்சிருக்கு எண்டு அவன் சொல்லி அதையும் வாசிச்சான். "மருந்தாளரின் பதிவுமுறையை அகற்றுவதல்ல எமது கோரிக்கை, தகுதிவாய்ந்த மருந்தாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே எமது கோரிக்கையாகும். அந்த அதிகாரசபையினுடைய எதிர்பார்ப்பு நியாயமானதாக இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமில்லை." அவையள் சொல்லினம் எண்டு வாசிச்சு முடிச்சான்.

'இப்ப பிரச்சினை விளங்குதோ பரமசிவம். இதுவரை காலமும் நீ ஒரு பார்மஸியைப் பதியிறதெண்டால் மருந்துகளைப் பற்றிப் படிச்சு பட்டம் வாங்கின ஒராளின்ரை பேரிலை பதியலாம். அவர் அந்தப் பார்மஸியிலை சம்பளம் வாங்குவார். ஆனால் முழுநேரம் அங்க நிற்கத் தேவையில்லை. நேரம் கிடைக்கிற மாதிரி வசதிப்பட்டால் வந்து எட்டிப் பாத்திட்டுப் போகலாம். வெள்ளையண்ணை பல சரக்குக்கடை நடத்திற மாதிரி ஆரும் நடத்தலாம். டிஸ்பிரினைக் கேட்டால் இதுதான் கிடக்கெண்டு பனடோலைக் குடுக்கலாம். பனடோலைக் கேட்டால் ரெற்றாசைக்கிளினைக் குடுக்கலரம். ஒயின்மென்றைக் கேட்டால் கிறீமைக் குடுக்கலாம். ஒண்டும் பேசாமல் வேண்டிக்கொண்டு வரவேண்டியதுதான். அப்பிடிப் படிக்காத ஆக்களை வைச்சு மருந்து வியாபாரம் செய்யிறது சட்டத்துக்கு முரண் எண்டு சனத்துக்குத் தெரியாது. இதைப்போல எங்கட சுற்றாடலில கன விளையாட்டுகள் பிழையா நடக்குது. ஆனால் சனத்துக்கு அது பிழை எண்டு தெரியாது.'


'இப்ப வாற சட்டத்தின்படி பார்மஸியை ஆற்ற பேரில பதியிறியளோ அவர் முழுநேரமா அங்க நிக்கவேணும். இங்கை போட்டுவாறன், அங்க போட்டுவாறன், ஒருக்காப் பாத்துக்கொண்டு நில்லுங்கோ, சாமான் கேட்டால் குடுங்கோ எண்டு போகேலாது. முழுநேரமா நிக்கிறவருக்கு இலங்கை மருத்துவக் கவுன்சிலால் வழங்கப்படுகிற மருந்தாளர் தகுதி அல்லது செயற்றிறன் சான்றிதழ் அவசியம் எண்டதுதான் புதுச்சட்டம். ஆனால் "அப்பிடி முழுநேரம் வேலை செய்யக்கூடியதாகப் படிச்சுப் பாஸ் பண்ணினவை எங்கள் மத்தியில கனபேர் இல்லை. அதாலை கன கடையளை மூட வேண்டிவரும், சனம் திண்டாட வேண்டிவரும்" எண்டு அந்த மருந்து வியாபாரியள் சங்கம் மக்களைப் பயப்பிடுத்தி இருக்காம். அது மட்டுமில்லை, சட்டத்தை மறுபரிசீலனை செய்யுங்கோ எண்டு அரசாங்கத்திட்டக் கேக்கப்போகினம் எண்டு சொல்லுற மாதிரிக் கிடக்கு.'

'இது மருந்தைப் பற்றிப் படிச்ச ஆக்கள் கனபேர் இல்லை எண்டதுக்காக கண்டவ நிண்டவையையும் மருந்தைக் குடுக்க விடுங்கோ எண்டு கேக்கிறமாதிரி எல்லோ கிடக்கு. ஏன் அந்த வேலைக்குப் படிச்ச ஆக்கள் இல்லை எண்டு ஒரு கேள்வி வருகுதோ இல்லையோ? நீங்கள் கொள்ளை இலாபம் எடுக்கிறதுக்காக குறைஞ்ச சம்பளத்துக்கு ஆளைத் தேடுறதால வந்த வினைதான் இது. மருந்து குடுக்கிற வேலைக்கு நல்ல சம்பளம் தாறன் எண்டு சொல்லிப்பாருங்கோ, கன பெடி பெட்டையள் விழுந்து விழுந்து படிச்சுச் சோதினை பாஸ் பண்ணி அந்த வேலைக்கு வருவினம். இது அதைவிட்டிட்டுப் பலசரக்குக்கடையைப் போல பார்மஸியை நடத்த வெளிக்கிட்டால் . . . . . . கடைசியில சனம்தான் சாகும். நாட்டுக்கு நல்ல மாற்றம் வேணும் எண்டால் மருந்திலையும் கைவைக்கலாம்!!!!'

இப்படிக்கு
*அப்பாவி அன்னமுத்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரலிங்கம்
(சிரேஷ்ட பொறியியலாளர்)



# சங்குப்பிட்டியும் சங்கடமும்

*(தங்கள் பத்திரிகையில் வெளியான சங்குப்பிட்டிப் பாலத்தின் அபாயகரமான நிலையினைப் பற்றிய தொடர்நடவடிக்கைகள் குறித்த எமது நேரடிக்கண்காணிப்பின் பலனான இந்த அறிக்கையினைச் சமர்ப்பிக்கிறேன்)*

ஊடகவியலாளர் ஒருவரின் பகிரங்க அறிக்கையின் அடிப்படையில் உடனடியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினைச் சார்ந்த இளம் பொறியியலாளர் ஒருவர் தற்துணிவு முடிவெடுத்து பொலிஸார் மூலம் மேற்படி பாலம் வழியான போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தியமை பாராட்டுதற்குரியது. ஆனால் முக்கியமான திருத்தவேலை களைச் செய்யமுற்படாமல் போக்குவரத்தினை மீள அனுமதித்தமை கேள்விக்குரியதாகும்.

தங்கள் செய்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து எமது அரச அதிபர் தனது பொறியியலாளரின் உதவியின்றித் தனியனாகவே அப்போது நடந்துகொண்டிருந்த சிறிய மேற்படைக்கான திருத்த வேலையினைக் 'கிரேன் 'மூலம் பார்வையிட்டார். பாலத்தின் கீழ்ப்பக்கத்தினைப் பார்வையிட்டாலும் அவையாவும் விழலுக்கு இறைத்த நீர் போலாயிற்று.

எனினும் கடமையுணர்வுகொண்ட அரச அதிபரும் வீதிகளுக்கான பொறியியலாளர்களும் கலந்து ஆக்கபூர்வமான முடிவொன்றினை எடுத்திருந்தனரென்றாலும் அவற்றினைக் கலக்கத்திலுள்ள பாமரமக்களுக்குத் தெரியப்படுத்துவது அவர்தம் கடமையில்லையா? சகல பத்திரிகைகளும் இதனைப்பற்றி மேலெதுவும் அறியத்தரப்படாத பட்சத்தில் வேலையற்றிருக்கும் நான் 05.12.2024 திகதியன்று மேற்கொண்ட களப்பயணத்தின்போது பின்வருவனவற்றை அறியக்கூடியதாகவும் கேட்கக்கூடியதாகவுமிருந்தன.

உதயன் பத்திரிகையில் 2021ஆம் ஆண்டு பிரஸ்தாபிக்கப்பட்ட குறைபாடுகளின் அடிப்படையில் வர்ணப்பூச்சு (painting) வேலைக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு சகல வல்லமை பொருந்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் விலைகள் கோரப்பட்டு, வழமை போல நடக்கும் குளறுபடிகளால் வேலை வழங்கல் தாமதிக்கப்பட்டு தற்போது கொடுக்கப்பட்ட நிலையில் வர்ணப்பூச்சு( painting) வேலைகளுக்கான ஆரம்ப வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் கீழே இறங்கிப் பார்க்கையில் துருப்பிடித்தமை பாரதூரமானதாகக் காணப்பட்டது. வடக்குப் பக்க முட்டுச் சுவரிலிருந்து (abutment) பாலம் 1 அங்குலம் அளவில் விலகியிருப்பது அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. இவ்விடத்தில் பாலத்தினையும் சுவரினையும் இணைத்துக்கொண்டிருக்கும் திருகும் மறையும் செயலிழந்து துருப்பிடித்தவையாகக் காணப்படுகின்றன. வடக்குப் பக்க முட்டுச்சுவருக்கும் மேற்படைகளுக்குமிடையே காணப்படும் ஒரு இடைவெளியினைப் பார ஊர்திகள் விரைவாகத் தாண்டும்போது அதன்மேல் ஒரு சிறிய கல்லினை வைத்தபொழுது அது துள்ளிப்பாய்ந்த விதம்......அப்பப்பா! சிறுபிள்ளைகள் விளையாட உகந்த இடமாக இருக்கிறது.??

உதயன் பத்திரிகையில் 2021ஆம் ஆண்டு கூறியவாறு, பாலத்தின் கீழ்ப்பக்கம் விரைவாகத் துருப்பிடித்துச் செல்கின்றது. வடக்குப் பக்கத்தின் வலதுபக்க 'hand rails 'முற்றாகக் கழன்ற நிலையில் நடனம் ஆடிக்கொண்டிருக்கின்றன. அங்கு வேலையிலிருக்கும் ஒப்பந்தக்காரரோ தங்களுக்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை என்கிறார்கள். பெரும்பான்மைச் சமூகத்தினைச் சேர்ந்த ஒப்பந்தக்காரரின் உயர்நிலையிலுள்ளவருடன் அவர்தம் மொழியில் உரையாடிய போதுதான் அவர்எமது பொறியியலாளர்களிலும் அரச அதிபரிலும் மேலான அறிவினைக் கொண்டவராக எமக்குத் தென்பட்டார். அதாவது தற்போது செய்யும் வேலை ஒரு கண்துடைப்பு என்றும் திருத்த வேலைகள் செய்த பின்னர்தான்வர்ணப்பூச்சு செய்ய வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் ஒரு தீர்க்கதரிசிதான்! அண்மையில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் ஒரு செவ்வியில் கூறியதைப்போல 'நாம் படித்தது எல்லாம் எமது குடும்பத்தை வளர்ப்பதற்குத்தான்' என்பது தெளிவாகிறது. பாலத்தின் மேற்பரப்பின் கவர்ச்சித்தன்மை எம்மை மிகவும் கவர்ந்துவிட்டதென்றாலும் அதன் உடம்பில் பரவிக்கொண்டிருக்கும் புற்றுநோயினைத் தீர்க்க யாருமிலரோ??

மேற்கூறப்பட்ட கவனவீனங்களையும் குறைபாடுகளையும் களைய விரும்பின் இதில் ஆர்வமுள்ள அரச அதிகாரிகளும் மக்கள் சேவையினைத் தெய்வமாகக் கருதும் பத்திரிகைகளும் முன்வந்து சனநாயக முறையில் அரசதரப்பினர் மட்டுமின்றி எதிர்த்தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடினால் ஒன்றும் மூழ்கிப்போகாதே.

## நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை

## (05.05.1934 - 20.04.2024)

17

# யாழ்ப்பாணம்: நாவலர் பிறந்த மண்!

பா.துவாரகன்

கடந்த சில வாரங்களாக சஞ்சீவி வார இதழில் ஆசிரியர் உமாமகேசுவரனது நினைவுகளை மீட்கும் கட்டுரைகள் வரவில்லையே என்று நண்பர்கள் சிலர் தொலைபேசி அழைப்பெடுத்து மிகுந்த ஆவலோடு கேட்டார்கள். உடல்நலக் குறைவு காரணமாக 5 நாள்கள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டி ஏற்பட்டது. கட்டுரைகள் எழுதாமைக்கு இதுவும் ஒரு காரணம்.

2008 ஆவணி முதல் 2009 கார்த்திகை வரையான காலப்பகுதியில் அளவெட்டியில் வாழ்ந்த பண்டிதர் நாகலிங்கத்தின் (வடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவர்களது தந்தையார்) இல்லத்துக்கு வாரவிடுமுறை நாள்களில் சென்று உரையாடுவது வழமை. வினாக்களை எழுதிக்கொடுத்தால் அடுத்தவாரம் செல்லும்போது விடை எழுதிவைத்திருப்பார். பண்டிதருடன் விரிவான ஒரு நேர்காணல் செய்ய விரும்பியிருந்தேன். எந்த ஒரு வினாவை எழுதிக்கொடுத்தாலும் விளக்கமாக விடை எழுதித் தருவார். ஏறத்தாழ 100 வினாக்கள். அனைத்துக்கும் விடை எழுதித்தந்தார்.

**துவாரகன்(வினா):** மகாபாரதமும் திருக்குறளும் ஆறுமுகநாவலரது கைக்குக் கிடைத்தபடியால் அவற்றிலே பிரதிபேதங்கள் என்று வரவில்லை. அவர் ஏடுகளில் இருந்த பாடபேதங்களைப் பார்த்து பொருத்தமானதை மட்டும் எடுத்து நூலாக்கினார். ஆனால் இராமாயணம் வைஷ்ணவர்களுடைய கைக்குக் கிடைத்தது. அதிலே அவர்கள் பிரதிபேதங்களையும் போட்டிருக்கிறார்கள். அதனால் இன்று இராமாயணம் பல்வேறு விதமாக வழங்கப்படுகிறது.


தாங்கள் நாவலரைப் பற்றி மாணவர்களுக்கு எழுதிக் கொடுத்த கட்டுரைகள் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

நாவலர் தமிழுக்கு ஆற்றிய பணியை விரிப்பிற் பெருகும் என்று கூறியிருக்கிறீர்கள். இன்னும் பொ.கைலாசபதி (திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை முன்னாள் உப அதிபர்) இராமகிருஷ்ணரோ விவேகானந்தரோ விஷேசம் என்றால் விவேகானந்தர் தான் விஷேசம் என்று கூறி விவேகானந்தரை விட நாவலர் விஷேசம் என்று எவரோ கேட்டபோது சொல்லியிருக்கிறார். இக் கூற்றை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் ஈழத்திலே தான் நிலைபெற்றதாகவும் தமிழ் நாட்டிற்கே வழி காட்டியாக அமைந்ததாகவும் கூறுவர். பேராசிரியர் சிவலிங்கராசா இது பற்றித் தனது ஆய்விலே சிறப்பாகக் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்துடன் பரிச்சயமுள்ளவர்கள் யாழ்ப்பாணத்தை இன்னும் நாவலர் பிறந்த மண் என்று உயர்வோடு போற்றுவர்.

தங்களது மாணவனான க.உமாமகேசுவரம்பிள்ளையவர்களிடம் கொழும்பிலே தமிழ் படிக்கச் செல்லுகின்றபோது அவர் கூறுகின்ற விடயங்களை எழுதிவைப்பது வழக்கம். ஒரு நாள் இந்தியாவிலே தருமபுர ஆதீனத்திலே திருமுறைகளை அடங்கன் முறையாகப் பதிப்பதற்குத் தன்னை அழைத்தது பற்றியும் அங்கு நடந்த ஓர் உரையாடலைப் பற்றியும் உமாமகேசுவரன் கூறினார்.



பண்டிதர் நாகலிங்கம்

**உமாமகேசுவரன்:**

தர்மபுரீஸ்வரர் ஆலயத்திலே ஒரு சந்திப்பு. ஒரு மாலை நேரம் வேலையெல்லாம் முடிந்த பின்னர் இச்சந்திப்பு நிகழ்ந்தது. நுளம்பு ஒன்று என் தோளில் வந்தமர்ந்தது. அதனை அடித்தபோது என்ன என்று கேட்டனர். நுளம்பு என்றேன். அப்போது ஒருவர் கேட்டார். அவரது பெயர் ஆறுமுகம். "யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து நுளம்பு என்று சொல்கிறீர்கள். நுளம்பு என்ன தமிழ்ச் சொல்லா" என்று கேட்டு "கொசு என்பது தான் சரி" என்றார் கொதுகு என்ற நிகண்டுச் சொல் ஒன்றை எடுத்துக் காட்டினார். எனக்கு உசாத்துணைக்கு என்று ஒரு அலுமாரியிலே தேவையான புத்தகங்களை அடுக்கிவைத்திருந்தனர். அப்போது நான் உடனே சொன்னேன். "போய்ப் பட்டினத்துப் பிள்ளையார் அருளிய கோயில் நான்மணிமாலையை எடுத்துவாருங்கள்" என்று. அதிலே நான்காவது பாட்டிலே நூலைப் பார்க்க, கடைசி வரி "கானில்வால் நுளம்பும் கருடனாதலினே" என்று வருவதைக் காட்டினேன்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு என்னிலே அவர்களுக்கு பெருமதிப்பு உண்டானது. என்னை இந்தியாவிலே நல்லமுறையில் கவனித்தார்கள். ஒரு குறையும் வைக்கவில்லை. இதைப் போய் ஆறுமுகம் ஆதீன சுவாமிக்குச் சொல்லியிருக்கிறார். சுவாமி உடனே சொன்னாராம் அவன் நாவலருடைய மண்ணிலே இருந்து வந்தவன் என்று. இதன் பிறகு ஒவ்வொருநாளும் பதிப்பு வேலை முடிந்து ஆறுமுகம் ஆதீனத்திடம் விடைபெறச் செல்லும் போது இன்று புதிதாக உமாமகேசுவரன் என்ன சொன்னார் என்று கேட்பார்.

**பண்டிதர் நாகலிங்கம் (விடை):**

ஆறுமுகநாவலரது கையில் அகப்பட்டபடியால் திருக்குறள் முதலான பல நூல்கள் பாடபேதம் இல்லாமற் பதிப்பிக்கப்பட்டன. தமது நுண்மாண் நுழைபுலத்தால் ஏடுகளில் வேறுவகையாக அமைந்து கிடந்த சொற்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றில் மிகமிகப் பொருத்தமானதை எடுத்துக்கொண்டு மற்றையவற்றைத் தள்ளிவிடுவது நாவலர் வழக்கமாக இருந்ததால் நாவலர் பதிப்புகளில் பிரதிபேதம் காட்டப்படுவதில்லை. இது நாவலர் பதிப்புகளில் உள்ள விசேடமாகும்.

இராமாயணம் முதலிய நூல்கள் ஐயங்காரர்களிடம் அகப்பட்டு ஒரு சொற்கே பல பேதங்கள் காட்டப்பட்டுள்ளன. இதனால் படிப்போர்க்கும் குழப்பம் ஏற்பட ஏதுவாயுள்ளது. கட்டுரை பெரிதாக எழுதப்படாதபோதும் முக்கியமான அம்சங்கள் அதிலுண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் பயணம்

ஆனந்தன்
மாகியப்பிட்டி



சஞ்சீவி சிறுகதை

இரவு படுக்கையில் இருந்தபடி "மருமகள் குமுதினியைப் பார்த்துக் கதைச்சு கனநாளாப் போச்சு. நாளைக்குக் கட்டாயம் அவள் பிள்ளையைப் போய்ப் பார்க்கவேணும்" எனக் கவலையோடும், ஏக்கத்தோடும் தனக்குள் சொல்லிக்கொண்டார் மணியண்ணர். மணியண்ணரின் போக்குவரத்து எல்லாம் அவரது 'றலி' சைக்கிளில் தான். முப்பது வருடங்களுக்கு மேலாக அவர் வைத்திருக்கும் அந்தச் சைக்கிளில எத்தனை கிலோமீற்றர் தூரம் என்றாலும் அசராமல் போய்வருவார். அறுபது வயதுக்கு மேலாகி விட்டபோதிலும், தோட்டவேலை செய்து இரும்புபோல உறுதியாக இறுகியிருந்த அவர் உடம்பில் இன்னும் தளர்ச்சியேற்படவில்லை.

மறுநாள் காலை வேளையோடு எழுந்து குளித்துவிட்டு கத்தரிக்காய் பொரியலோடு அரிசிமாப்பிட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, வீட்டுப்படலையைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார் மணியண்ணரின் மச்சான் செல்லையர். "என்ன மச்சான் புதினமாக் கிடக்கு. எப்பவும் பத்துப் பதினொரு மணிக்குத்தான் வழமையாய் காலமைச் சாப்பாடு சாப்பிடுறனி, இண்டைக்கு வேளையோடு சாப்பிடுறாய் என்ன விசயம்?" எனக் கேட்டபடியே திண்ணையில் ஏறியமர்ந்து கொண்டார் செல்லையர். "ஓம் மச்சான் அவள் மருமகள் குமுதினியைக் கண்டு கதைச்சு கனநாளாப்போச்சு. அது தான் வெயிலுக்கு முதல் வெளிக்கிட்டுப் போட்டுவரலாமெண்டிருக்கிறன்" என்றார் மணியண்ணர். "அட குமுதினியிட்டப் போகவே வெளிக்கிடுறாய்? நானும் அவள் பிள்ளையைக் கண்டு கனநாளாத்தான் போச்சு. நானும் உன்னோட வரட்டே?" எனச் செல்லையர் கேட்கவும் "நீ மோட்டார் பைக்காரன், நான் சைக்கிள்காரன் எப்பிடி நீ என்னோட வருவாய்?"எனக்கேட்டார் மணியண்ணர்.

"என்ன நான் மோட்டார் பைக்காரனோ? அது பழுதுபட்டுப் போய் மாதக்கணக்கில போர்ட்டிக்கோவில் தூசிபிடிச்சு நிக்குது. நீ விசர்க்கதை கதைக்கிறாய்"என்றார் செல்லையர் எரிச்சலோடு. "அப்ப எப்பிடி வரப்போறாய்?" என மணியண்ணர் கேட்கவும் "ஏன் உன்ரை சைக்கிளிலை டபிள் போகேலாதே" எனக் கேட்டார் செல்லையர். "நாசமாய்ப் போச்சு. நீ அரிசி மூடை போல உந்த உருப்படியிலை இருக்கிறாய், வசாவிளான் மட்டும் உன்னை வைச்சு எப்பிடி ஓடுறது? மாறி மாறி ஓடுவம்" என சற்றுநேரம் யோசித்த மணியண்ணர் பின்பு ஒரு முடிவுக்கு வந்தவராக "சரி மச்சான் நீயும் வந்தால் பிராக்காத்தானிருக்கும். வாபோவம் "என்றார். விரைவாகச் சாப்பிட்டவர் கைகளைக் கழுவியபடியே "இஞ்சை பாக்கியம் நான் ஒருக்கா வசாவிளானுக்கு குமுதினியைப் பார்க்கப் போகப்போறன். என்னோடை கொண்ணரும் வாறாராம்" என்றார் .

குசினிக்குள் இருந்து வெளியே வந்த பாக்கியம் "என்ன ரெண்டுபேரும் ஒரு சைக்கிளிலேயே போகப்போறியள்?" எனக் கேட்கவும் "ஓம் தங்கச்சி. ஏன் ரெண்டுபேரும் ஒரு சைக்கிளில போகேலாதே? அது தாராளமாப் போகலாம்" என்றார் செல்லையர். செல்லையர் எத்தனை கிலோ இருப்பார் என்று அளவெடுப்பது போல அவரை மேலும் கீழும் பார்த்த பாக்கியம் , 'இந்த உருப்படியை நீ எப்படித்தான் சுமந்துகொண்டு போகப்போறியோ?' எனப் பரிதாபத்தோடு தமது கணவரின் சைக்கிளைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டார். பின்னர் இருவரையும் பார்த்து "இப்ப ரோட்டிலை வாகனங்கள் கூடிப்போச்சு. அதுவும் இளம்பொடியள் மோட்டார் சைக்கிள்களில கண்ணை மூடிக்கொண்டு தலைதெறிக்க ஓடித்திரியுறாங்கள்.போட்டுவாறது கவனம்" என்றார்.

சுன்னாகம் கதிரைமலை சிவன்கோவிலுக்கு அருகாமையிலேதான் மணியண்ணரின்ர வீடு அமைந்திருந்தது. இருவரும் படலையைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது சற்றுத் தொலைவில் தெரிந்த கதிரைமலை சிவன்கோவில் கோபுரத்தைப் பார்த்துக் கும்பிட்டபடி "கதிரை மலையானே , நீ தான் இந்த ரெண்டையும் பத்திரமாய்க் கொண்டுபோய்க் கொண்டுவந்து சேர்க்கவேணும்"எனச் சொல்லிக்கொண்டார் பாக்கியம். காரணம் மணியண்ணரின் சைக்கிள் இருந்த திருக்கோலம் அப்படி. செல்லையர் பின்கரியரில் ஏறியமர்ந்திருக்க விழிபிதுங்க ஓடத்தொடங்கினார் மணியண்ணர். புன்னாலைக்கட்டுவான் சந்திக்கு வந்து வடக்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது, "மச்சான் !நிப்பாட்டு சைக்கிளை மச்சான் "என பதறியபடி கத்தினார் செல்லையர். "ஏன்? ஏன்? "எனக் காரணம் புரியாமல் குழப்பத்தோடு சைக்கிளோடு மல்லுக்கட்டி ஒருவாறு நிறுத்தியபின் "ஏன் மச்சான் நிப்பாட்டச் சொன்னனி" எனக் கேட்டார். "உந்தா பார் மணியம் , ரோட்டுக் 'கானோடை' எவ்வளவு ரத்தம் எண்டு, எந்தப் பாவியோ ஆரையோ வெட்டிப் போட்டுட்டான் போல" என பதறியபடி தான் பார்த்த இடத்தைச் சுட்டிக்காட்டினார் செல்லையர். மணியண்ணரும் செல்லையர் காட்டிய இடத்தைப் பார்த்துவிட்டு "அடக்கடவுளே பார்க்கவே பயமாக்கிடக்கு.ஆர் ஆர் வெட்டுப்பட்டாங்களோ? அந்தளவுக்கு ரத்தம் சிந்துப்பட்டுக்கிடக்கு" என்றார் நடுக்கத்தோடும் பரிதாபத்தோடும்.

அந்த நேரம், ஆலமரத்தினருகேயிருந்த தேத்தண்ணிக்கடை வாசலில் சடையர் செல்லக்கண்டு கையில் செம்போடு நின்றுகொண்டிருப்பதைக் கண்ட செல்லையர் "டேய் செல்லக்கண்டு இஞ்ச என்னடா நடந்தது? ஆரடா வெட்டுப்பட்டது?" எனக் கேட்கவும் "வெட்டுப்பட்டதோ? இஞ்ச ஒருத்தரும் வெட்டுப்பட்டதா நான் கேள்விப்படேல்லை, ஆர் சொன்னது?" என வியப்போடு கேட்டார் சடையர் செல்லக்கண்டு. "அட குருடா அங்க பாரடா ரோட்டுக் கானுக்கை எவ்வளவு ரத்தம் எண்டு. நீ எந்த உலகத்திலை இருக்கிறாய்?" எனக் கோபத்தோடு கேட்டார் செல்லையர். செல்லையர் காட்டிய இடத்தைப் பார்த்த சடையர் "அது உனக்கு ரத்தமோ?" எனக் கேட்டுவிட்டு கைகள் இரண்டையும் தொடையில் தட்டி குபீரெனச் சிரிக்கத் தொடங்கினார். "ஏன்? அது ரத்தமில்லாமல் வேறையென்ன?" எனக் குழப்பத்தோடு கேட்டார் மணியண்ணர். "நான் தானடா தேத்தண்ணி குடிக்கிறதுக்காக வெத்திலையைக் கொப்பளிச்சனான்" எனக் கூறிவிட்டு மீண்டும் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கத் தொடங்கினார் சடையர். "நிப்பாட்டடா சிரிப்பை. பெரிய திறமான வேலையைச் செய்துபோட்டாராம் ,சிரிக்கிறாராம். இப்பிடியே ரோட்டுக்கானுக்கை துப்புறது? எங்கையும் வேலிக்கரையோட துப்பக்கூடாதே?" என ஆத்திரத்தோடு கேட்டுவிட்டு சடையரை முறைத்துப்பார்த்தார் செல்லையர். "அவன் கிடக்கிறான் பேயன். நீ வா மச்சான் போவம்" எனச் சொல்லிய மணியண்ணர், செல்லையரின் கையைப் பிடித்து சைக்கிள் நிற்கும் இடத்துக்கு இழுத்துக்கொண்டு வந்தார்.

"இனி நீதான் ஓட வேணும்" என்றார் மணியண்ணர். மோட்டார் சைக்கிளிலிலேயே தேசமெல்லாம் சுற்றிய செல்லையர் சைக்கிள் சீற்றில் ஏறியிருக்கவே பெரும் சிரமப்பட்டார். ஒருவாறு ஏறியமர்ந்து ஓடத்தொடங்கவும் மணியண்ணர் பின்கரியரில் அமர்ந்துகொண்டார். தள்ளாடியபடி சைக்கிள் ஓடத்தொடங்கியது. "மச்சான் பின்சில்லு இடிக்குது. காத்துக்காணாது போல. ஓடு பாப்பம், எங்கையும் சைக்கிள் கடையிருந்தால் காத்தடிப்பம்" என்றார் மணியண்ணர். கொஞ்சத்தூரம் போனதும் சைக்கிள் கடையொன்று தென்பட்டது. சைக்கிளை விட்டு இருவரும் இறங்கினர். "அண்ணை பம்மை ஒருக்காத் தாங்கோ" என மணியண்ணர் கேட்கவும் என்புருக்கி நோயாளி போல காணப்பட்ட சைக்கிள் கடைக்காரர், இருமியபடியே பம்மைக் கொண்டுவந்து கொடுத்தார். உருவத்தில் பம்முக்கும் அவருக்குமிடையில் பெரிய வித்தியாசம் காணப்படவில்லை. அவரே ஒரு பம் போலத்தான் காணப்பட்டார்.

ஒரு வித்தியாசம் பம்மை விட அவர் உயரமாகவிருந்ததுதான். பம்மை வாங்கி செல்லையர் காற்றடிக்கத் தொடங்கியபோது "என்ன அண்ணை ரயரைக் காணேல்லை?" எனக் கேட்டார் சைக்கிள் கடைக்காரர்.

அந்த அளவுக்கு ரயர் தேய்ந்துபோயிருந்தது. மணியண்ணருக்குச் சுள்ளென்று கோபம் தலைக்கேறியது. ஆத்திரத்தோடு கடைக்காரரை முறைத்துப்பார்த்தார். அவர் கோபத்தில் முறைப்பார் என்பதை முதலே எதிர்பார்த்திருந்த கடைக்காரர் எங்கோ பார்த்தபடி "இந்த ரயரை விட வாழைப்பழத்தோல் கொஞ்சம் பரவாயில்லை" எனப் பொதுவாகக் கூறியபடி நெஞ்சு எலும்புகள் புடைக்க இருமத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையர் சைக்கிளை எடுத்து ஓடத்தொடங்க மீண்டும் மணியண்ணர் கரியரில் ஏறி அமர்ந்துகொண்டார். சாரைப் பாம்பு போல வளைந்து வளைந்து ரோட்டின் ரெண்டு கரைக்கும் மாறிமாறிப் போய்க்கொண்டிருந்தது சைக்கிள். "வெட்டுக்கானுக்கை விடாதை, கோதாரியிலை போவானே வெட்டுக்கானுக்கை விடாதே" எனக் கத்திக்கொண்டிருந்தார் மணியண்ணர். 'டுமீல்! 'என்றொரு வெடிச் சத்தம் 'ஐயோ!' எனக் கத்தியபடி இருவரும் நடுரோட்டில் விழுந்து உருண்டார்கள். இருவரது வேட்டிகளும் அலங்கோலமாகக் கலைந்து காற்றில் மிதந்தன. "ரோட்டோடை படு! ரோட்டோடை படு! தலையைத் தூக்காதை அசையாமல் கிட. ஆரோ சுடுறாங்கள்" எனக் கத்தினார் மணியண்ணர். சிறிது நேரம் வரை இருவரும் பயத்தில் மூச்சுவாங்க ஆடாமல் அசையாமல் அப்படியே ரோட்டில் கிடந்தார்கள்.

சற்றுநேரம் சென்றது நெஞ்சு, வயிறு, முதுகு என எல்லா இடமும் தடவிப்பார்த்த மணியண்ணர் வெடிபிடிக்கேல்லை. நல்லகாலம் குறிதவறிப்போச்சு என தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே "மச்சான் எனக்கொண்டுமில்லை .உனக்கு...? "என நடுக்கத்தோடு கேட்டார். " எனக்கும் வெடி பிடிக்கேல்லை. தூரநிண்டு சுட்டிருக்கிறாங்கள் போல, அதுதான் குறிதவறிப்போச்சு, கிட்ட வந்து சுட முதல் டக்கெண்டு எழும்பி ஓடுவம்" என்ற செல்லையர் உடம்பெல்லாம் பதற தட்டுத் தடுமாறி எழுந்து, விழுந்து கிடந்த சைக்கிளைத் தூக்கி நிறுத்தி அதில் ஏறியமர்ந்து பெடலை மிதித்து ஓடத்தொடங்கினார். டக்கு டக்கு என பின்சில்லு தாளம்போட்டது. கீழேயிறங்கி பின்சில்லைப் பார்த்தவர் "அட மச்சான் இஞ்சைபார் அரை அடி நீளத்துக்கு ரயர் பிஞ்சுபோய்க்கிடக்கு " என்றார். மணியண்ணரும் ரயர் கிடந்த கோலத்தைப் பார்த்துவிட்டு "அட இதுதான் அந்தளவுக்கு சத்தமா வெடிச்சிருக்குது. அப்ப எங்களை ஆரும் சுடேல்லை..." என்று சொல்லிவிட்டுப் பலமாகச் சிரிக்கத் தொடங்கவே செல்லையரும் சேர்ந்து சிரிக்கத் தொடங்கினார். சிரித்து முடிந்தபின் மணியண்ணர் கேட்டார் "மச்சான் நாங்கள் கத்திக்கொண்டு விழுந்து உருண்டதை ஆரும் கண்டிருப்பினமே?" என்று. "எத்தனையோ பேர் இந்த ரோட்டாலை போய் வருகினம் காணாமல் விட்டவையே?" என்றார் செல்லையா. "தெரியாத ஆக்கள் கண்டால் பரவாயில்லை. தெரிஞ்ச ஆக்கள் பாத்திருப்பினம் எண்டால் பெரிய பரிசுகேடு. மச்சான் இந்த விசயம் எங்களுக்குள்ளேயே இருக்கட்டும். அயந்தும் ஆருக்கும் சொல்லிப்போடாதை. அதுவும் என்ர மனுசிக்கு இந்த விசயம் தெரிஞ்சு தெண்டாலோ பிரச்சினை வாறநேரம் எல்லாம் இதைச் சொல்லிச்சொல்லி என்ர மானத்தை வாங்குவாள்" என்றார் மணியண்ணர். "உனக்கென்ன விசரே? நான் ஏன் இதை மற்றவைக்குச் சொல்லப்போறன்? சொன்னால் எனக்கும் தானே வெட்கக்கேடு" என்றார் செல்லையர்.

"அது சரி இனி எப்பிடி குமுதினி வீட்டை போறது?" எனச் செல்லையர் கேட்கவும் "நடராசாதான். இன்னும் கொஞ்சத்தூரம் நடப்பம். உன்ரை உடம்பும் கொஞ்சம் குறையட்டும்" எனப் பதிலளித்தார் மணியண்ணர். இதனால் எரிச்சலடைந்த செல்லையர் "உன்ரை சைக்கிளை நம்பி உன்னோடை வந்தன் பார் எனக்கு இது தேவைதான்" என்றார். இருவரும் நடக்கத் தொடங்கினர். ஒல்லியான உடம்புடைய மணியண்ணர் சர்வசாதாரணமாக நடைபோட, குட்டியானை போல தோற்றம் கொண்ட செல்லையரோ மூச்சுவாங்க நடந்தபடி கேட்டார் " இன்னும் கனதூரம் நடக்கவேணுமே? " என்று கொதிப்படைந்தவராக.

"அந்தா தெரியுது புளியமரம் அதுக்குப் பக்கத்திலதான் குமுதினியின்ரை வீடு" என்றார் மணியண்ணர். காலை புறப்பட்ட அவர்கள் குமுதினி வீட்டையடைந்தபோது ஒரு மணியாகிவிட்டது.

(05 ஆம் பக்கம் பார்க்க)



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஊடாகவே தமிழ் ஈழக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக பல தமிழ், சிங்கள அரசியல் விமர்சகர்கள் எழுதி வருகின்றனர். பேராசிரியர் பாலசுந் தரம்பிள்ளையும் தந்தை செல்வா நினைவுப்பேருரையில் "தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்தவர் தந்தை செல்வா" என உரையாற்றி யிருந்தார். நான் அப்போதே இத னைக் கண்டித்து சரிநிகர் பத்திரிகை யில் எழுதியிருந்தேன். ஊர்காவற் றுறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழரசுக்கட்சி யிலிருந்து பிரிந்து தமி ழர் சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்த நவரத்தினம் தான் தமிழ் ஈழக்கோரிக் கையை முன்வைத்தாரெனச் சிலர் கூறிவருகின்றனர். உண் மையில் தமிழ் ஈழக்கோ ரிக்கையை முதல் முதலாக முன் வைத்தவர் சுந்தரலிங்கம் தான். 1955 ஆம் ஆண்டு வவுனியாவில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சுந்தர லிங்கம் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். 1956 ஆம் ஆண்டு நடை பெற்ற இடைத்தேர்தலில் சுந்தரலிங்கம் 78.9 % ஆன வாக்கு களால் வெற்றியீட்டினார். சுந்தரலிங்கத்துக்குக் கிடைத்த வாக் குகள் (தமிழ் ஈழக்கோரிக்கைக்கு ஆதரவாக) 6853 ஆகும். சுந்தர லிங்கத்தை எதிர்த்துப் போட்டியிட்ட தர்மலிங்கத்துக்குக் கிடைத்த வாக்கு கள் 1856 ஆகும்.


13



தி.பிரியந்தகி
தரம் - 9
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி



ரா. விதுர்ஷிகன்
தரம் - 11




ரி.டிலக்சன்
தரம்-4B
யாழ்ப்பாணக் கல்லூரி



பி. சஞ்ஜேய்
தரம் - 5
யா /கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



எஸ்.டிலக்சன்
தரம் - 9C
கொக்குவில் இந்துக் கல்லூரி



இ.திரிசன்.
தரம் - 1B
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

மாணவர்களே!
நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.
அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

# சைக்கிள்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரையும் கண்டதும் பெரிதும் மகிழ்ச்சியடைந்த குமுதினி "வாங்கோ" எனப் புன்னகையோடு வரவேற்றாள். உச்சி வெயிலில் இருவரும் வேர்த்துக்களைத்து வந்திருப்பதைக் கண்டு பரிதாபமடைந்த குமுதினி " ஏன் மாமா வெயிலுக்கு முதல் கொஞ்சம் வேளையோட வந்திருக்கலாமே?" எனக் கேட்கவும் "அதை ஏன் பிள்ளை கேக்கிறாய் ?வேளையோடதான் வெளிக்கிட் டனாங்கள்....." என செல்லையர் ஆரம்பிக்கவும், தாங்கள் பட்டு வந்த அவலங்களைக் கூறி செல்லையர் மானத்தை வாங்கத் தயாராகின்றார் என்பதை உணர்ந்துகொண்ட மணியண்ணர் தமது விரல்களால் செல்லையரின் உள்ளங்கையைச் சுரண்டி எச்ச ரிக்கை செய்தார். அதைப்புரிந்துகொண்ட செல்லையர் "வரும் வழியிலை சைக்கிள் ரயர் வெடிச்சுப்போச்சு. நடந்து வந்ததில சுணங்கிப்போச்சு" என்று கூறி மானத்தைக் கொஞ்சம் காப்பாற் றிக்கொண்டார். அப்போதுதான் அவர்கள் ஓடிக்கொண்டுவந்த அந்த சைக்கிளைப் பார்த்த குமுதினி சிரிப்பை சிரமப்பட்டு அடக்கியவளாக 'இரும்பு விலைக்கு நிறுத்து விற்கவேண்டிய சைக்கிளில எப்படித்தான் ரண்டுபேரும் வந்தினமோ?'என எண்ணி வியப்படைந்தாள். அவள் இருவரையும் உள்ளே வரும்படி கூறவும் வெயிலுக்குள் நடந்துவந்த களைப்பில் இருவரும் அப்பாடா என ஆறுதல் பெருமூச்சுடன் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டார்கள்.

சற்றுநேரம் கழிந்தபின் குமுதினி இருவரையும் பார்த்து "சாப்பிட வாங்கோ" என அழைத்தபோது செல்லையர் "இப்ப என்னத்துக்குப் பிள்ளை?" என ஆரம்பிக்கவும் கோபமடைந்த மணியண்ணர் பேசாமல் இரு என்ற பாவனையில் அவரை முறைத்துப் பார்க்க வும் செல்லையர் அத்தோடு நிறுத்திக்கொண்டார்.

சாப்பிட்டபின் சற்று இளைப்பாறும் பொருட்டு படுத்தவர்கள் மெய்மறந்து தூங்கியும் விட்டார்கள். செல்லையர் கண்விழிப்ப டைந்து நேரத்தைப் பார்த்தபோது மணி ஐந்தாகிக் கொண்டிருந் தது. துடித்துப் பதைத்து எழுந்தவர் "மச்சான் எழும்பு நேரம் ஐந்தாய்ப் போச்சு. இப்ப பஸ்ஸைப் பிடிச்சாத்தான் யாழ்ப்பாணம் போய் சுன்னாகம் போற பஸ்சைப் பிடிக்கலாம் " என்றார். கண்விழித்து எழுந்த மணியண்ணர் "பஸ்ஸிலை போகப் போறியோ? அப்ப சைக்கிளை என்ன செய்யிறது?" எனக்கேட்டார் சற்றுக்கோபமாக. "அப்ப எப்பிடி வீட்டை போறது? "என எரிச்ச லோடு கேட்டார் செல்லையர். "ஓடிக்கொண்டுதான் [illegible] இது மணி யண்ணரின் [illegible] நீ [illegible] ரயர் வெடிச்சுப்போய்க்கிடக்கு ஒட்டப் போறீரோ? ஒண்டு செய் குமுதினியிட்டை ஊசியும் நூலும் வாங்கி ரயரையும் ரியூப்பையும் தை. நீ இப்ப வரப்போறீயோ? இல்லையோ? நான் வெளிக்கிடப் போறன்" என எழுந்துகொண்டார் செல்லையர். "இரவு இஞ்சை படுத்திட்டு நாளை காலை வெளிக்கிடுவம்" என்று மணியண்ணர் கூறவும் "இஞ்சை படுத்துக்கிடந்திட்டு நாளைக்கு வீட்டை போனால் இரவிரவாகக் குடிச்சுப்போட்டு எழும்பேலாமல் எங்கேயோ கிடந்திட்டுவாறன் எண்டு மனுசி பத்திரகாளிபோல குதிக்கத் துடங்கிவிடுவாள். நான் இப்பவே வெளிக்கிடுறன்" என்ற செல்லை யர் "நான் போட்டுவாறன் பிள்ளை " என குமுதினியிடம் சொல்லி விட்டு விறுவிறுவென வீட்டைவிட்டு வெளியேறினார்.

மறுநாள் காலை மணியண்ணர் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானபோது குமுதினி "மாமா உதை எங்கை கொண்டுபோறியள்? (சைக்கிள் என்று சொல்லவும் அவளுக்கு மனச்சாட்சி இடம் தரவில்லை) இஞ்சை விட்டிட்டு பஸ்ஸிலை போங்கோ. அது இஞ்சையே நிக்கட்டும். பேசாமல் புதுச்சைக்கிள் ஒண்டு வாங்குங்கோ. நான் காசுதாறன்" என்றாள் பரிவோடு. அவ்வளவுதான் மணியண்ணருக்கு வந்துதே கோபம் "என்ன பிள்ளை சொல்லுறாய், இதை இஞ்சையே விட்டிட்டுப் போறதோ? புதுச்சைக்கிள் வாங்கிறதோ? இது வெறும் சைக்கிள் இல்லை குமுதினி என்ரை பிள்ளை இது. ஒருநாள் பாத்து நான் பஸ்ஸிலை ஏறி அறியன். இந்த யாழ்ப்பாணக்குடா எல்லாம் என்னைச் சுமந்து திரிஞ்சது இந்தச் சைக்கிள்தான். கோயில் திருவிழாக்களுக்கு எண்டாலும் சரி, கல்யாணவீடு, செத்தவீடு எண்டாலும் சரி படத் தியேட்டர்களுக்கு எண்டாலும் சரி இதிலை நான் போய்வருவன். இது என்ன சைக்கிள் தெரியுமே றலி சைக்கிள் பிள்ளை றலி. இப்ப இந்தச் சைக்கிள் வாங்க முடியுமே? அதுசரி எப்ப வந்தது உந்த மோட்டார் சைக்கிள்? நான் என்ன மோட்டார் சைக்கிள் வாங்கக் காசில்லாமல் இருக்கிறன் எண்டு நினைச்சியே? புதுசைக் கண்டவுடனை பழசை மறக்கக்கூடாது பிள்ளை. என்ர மோதிரத்தை வித்துப்போட்டு எண்டாலும் இதை நான் திருத்தி ஓடுவன். நான் சாகும்வரை இதிலைதான் ஓடுவன்" என்றார் மணியண்ணர். உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய மணியண் ணருக்கு மூச்சுவாங்கியது. "நான் போட்டுவாறன் பிள்ளை" எனக்கூறிய மணியண்ணர் கேற்றைத் திறந்துகொண்டு வெளியே வந்து வீதியோரமாக சைக்கிளை உருட்டத் தொடங்கினார். தனது பார்வையிலிருந்து மறையும் வரை வியப்போடு மணியண்ண ரையே பார்த்துக்கொண்டிருந்தாள் குமுதினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்

பண்டைய தமிழ் இலக்கியங்களின் பல்பரிமாணத் தன்மையினை விளக்கும் முகமாக 'சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்' என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொடர் சஞ்சீவியில் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ளது. பண்டைய தமிழர் மருத்துவம், பண்டைக்கால தமிழர்களின் வணிகமும் வணிக நடைமுறைகளும், தமிழர் பண்பாடு, பண்டைய தமிழரின் சமூக நோக்கு, பண்டைய இலக்கியங்களின் பொருளாதாரக் கருத்துகள், அறக் கருத்துகள், சங்ககாலப் பெண் கவிஞர்களின் பார்வையில் பண்டைய தமிழர் வாழ்வியல், சமூக வாழ்வியலில் பெண்களின் வகிபாகம் போன்ற விடயங்களை இந்தக் கட்டுரைத்தொடர் வாராவாரம் வாசகர்களுக்குத் தரவுள்ளது.

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
*சந்தைப்படுத்தல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

காடுகாண் காதை, வேட்டுவவரி, புறஞ்சேரியிறுத்த காதை, ஊர்காண் காதை, அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை, ஆய்ச்சியர் குரவை, துன்ப மாலை, ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சின மாலை, அழற்பாடு காதை, கட்டுரைக் காதை என பதின்மூன்று காதைகளினைக் கொண்டுள்ளது. ஏனைய ஏழு காண்டங்களான குன்றக்குரவை, காட்சிக்காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக் காதை, வரந்தரு காதை போன்றன வஞ்சிக் காண்டத்தில் உள்ளடக்கியுள்ளன.

சிலப்பதிகாரத்தை ஏனைய காப்பியங்களுடன் ஒப்பிடுகையில் பின்வரும் பண்புகளினால் தனிச்சிறப்பு வாய்ந்த காப்பியமாக விளங்குகின்றது. தமிழில் தோன்றிய முதற்காப்பியம் என்பதற்காக மட்டுமல்லாது தமிழர்களின் வாழ்வியல் முறைகள், ஒழுக்கம், அறம், பண்பு, அரச ஒழுக்கம், ஆட்முறைகள் போன்றவற்றினை அழகாகவும் கச்சிதமாகவும் எடுத்துரைக்கின்றது. மேலும், வணிககுலத்தில் பிறந்த பெண் ஒருத்தி செயற்கரிய செயல்களினைச் செய்ததின் விளைவாக எவ்வாறு தெய்வமாக நோக்கப்படுகின்றாள் என்பது கவிதை மொழி, நாடக வழக்கு, கூத்து வழக்கு ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கண்ணகி கதைபோல் சங்ககாலத்திலும் கதைகள் மக்கள் மத்தியில் பிரபலமாக இருந்தன. இதற்கு நற்றிணையில் 216 ஆவது பாடல் சான்றாகவுள்ளது.

இக்காவியமானது சமூக சமய ஒற்றுமையினை வலியுறுத்துவதுடன் கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக இயற்கையினையும், அரசினையும் போற்றியதான வாழ்த்துப்பாவினைக் கொண்டமைந்துள்ளது. "திங்களைப் போற்றுவதும்! கொங்கு அல்தார்ச் சென்னி குளிர் வெண் குடைபோன்று ..." (சில 1 : 12) அத்தி மலர்களினால் தொடுக்கப்பட்ட மாலையினை அணிந்த சோழன் அவனுடைய அருள்மிகுந்த வெண்கொற்றக்குடையினைப் போன்று, இந்த அழகிய உலகிலேயே தண்ணொளி பரப்புகின்றதனால், நாமும் அந்த தண்ணிய திங்களினைப் போற்றுவோம். இவ்வாறே சங்க இலக்கியங்களிலும் இயற்கையினையும் அரசனையும் வாழ்திப் பாடிய பாடல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக உறையூர் மருத்துவன் தாமோதரணார் என்ற புலவர் 60 ஆவது புறநானூற்றுப்பாட்டில் மன்னன் கீர்த்தியினைப் பாடும்போது வெண்குடை என்ற பதம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குச் சாட்சியாக பின்வரும்பாடல் அமைகிறது.

**வெயில் மறை கொண்ட உருகெரு சிறப்பின்**
**மாலை வெண்குடைய ஒக்குமால் எனவே!**

(புறம் 60 : 1112)

இவ்வாறான வாழ்த்துப்பாடல்களில் இறைவனைப் பாடுவதற்குப் பதிலாக இயற்கையினையும், அரசனையும் பாடுகின்ற வழமையானது சங்க காலத்தில் இருந்தது. சங்கமருவிய காலத்துப் படைப்புகளில் இறைவாழ்த்து அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக உலகப் பொதுமறையான திருக்குறளில்,

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

எழுத்துகளில் எவ்வாறு அகரம் முதன்மையானதோ அவ்வாறே உலகில் ஆதிபகவனே முதன்மையானவர். அதாவது கடவுளே உலகத் தோற்றத்துக்கு முதன்மையானவர். இதனைப் போல் சங்கமருவிய காலத்து ஏனைய நூலான நாலடியாரில் கடவுள் வாழ்த்து "வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்" என ஆரம்பிக்கிறது. வானத்தில் தோன்றி மறைகின்ற இந்திரனைப் போல மானிட வாழ்வில் திடீரென வர இருப்பதைப் பற்றி அறிந்திருக்க முடியாதனால் எமது உள்ளத்தில் நாம் எண்ணியவை அனைத்தும் நிறைவடைய வேண்டும் என எண்ணி இறைவனை வேண்டி வணங்குவதோடு மற்றும் நித்தமும் நினைவு கொள்வோம்.

இறைவனை வணங்குதலும், எண்ணுதலும், வாழ்த்துவதும் சங்கமருவிய காலத்துப் படைப்புகளில் காணப்பட்டபோதும் சிலப்பதிகாரத்தில் இயற்கையினையும், மன்னனையும் போற்றுகின்ற சங்க காலத்து முறைமையும் காணப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு தனித்துவமான பண்புகளினைக் கொண்டுள்ள சிலப்பதிகாரமானது (சிலம்பு : பதி 5557) மானிட வாழ்வியலுக்கு மூன்று பெரும் உண்மைகளினை உணர்த்துகின்றது.

அரசியலில் அறம் பிழைத்தவர்களுக்கு அறமே கூற்றாக அமைந்து அவர் உயிரைப்போக்குவதும், கற்பு வழுவாது வாழ்கின்ற பத்தினிகள் உயர்ந்தவர்கள், மானிட வாழ்வில் போற்றப்படவேண்டியவர்கள், முன்செய்த வினையானது பிற்பிறவியில் சினந்து வந்து, அதற்குரிய பயனை ஒருவருக்கு ஊட்டும் என்றவாறான கருத்துகளினைச் சிலப்பதிகாரம் மானிட சமுதாயத்துக்கு உணர்த்துகின்றது.

(தொடரும்)



ரஜிதா

# அனார்

## சில குறிப்புகள்

ஒரே விருப்பு வெறுப்புகளைக் கொண்டவர்களல்லர். ஒரே பாதை வழி தம்மைக் கண்டடைபவர் அல்லர். அனைவருமே தனித்துவமான உயிரிகள். ஒத்திசையும், ஈர்த்துக்கொள்ளும் சில இயல்புகளால் நமக்கான நபர்களைத் தக்கவைத்துக்கொள்ள அன்பு, காதல், இரக்கம், தாய்மையுணர்வு, தோழமையுணர்வு என வெவ்வேறு படிநிலைகளோடு வாழ்வனுபவத்தை பெற்றுக்கொள்கின்றோம். அதற்கான அறங்களை, சுதந்திரத்தை, கட்டுப்பாடுகளை, பொறுப்புகளைக் கொண்டும் இயங்குகின்றோம். நிரந்தரமற்ற இப்பிரபஞ்சத்தின் மானுட இருப்பின் உண்மையும் இரகசியமும் இதுவே.

எம் உள்ளெரியும் அந்தர ஆத்மாவிற்கான இரையைக் கவ்விக்கொள்வதற்கான அலைச்சலில் சமூக, கலாசார நடைமுறைகள், பிற்போக்குத்தனங்கள், அடக்குமுறைகள், புறக்கணிப்புகள், முற்போக்குக் கருத்தியல்கள் என்பனவும் வாழ்வின் இன்னபிற உன்னத விடயங்களும் தாக்கம் செலுத்தும் காரணிகளாகவிருக்கும். நீடித்து வளர்ந்து செல்லும் நினைவுகளின் பாதைகளில் வாழ்வின் இரகசியத்திற்கான அரூபப் பாதை செழித்து வளரத் தலைப்படும். அறிவின் தேடலும், நிகழ்கணங்களின் மீது தீராத பித்தும் கொண்ட ஒவ்வொரு உயிருக்கும் 'வாழ்வென்பது கணத்திற்குக் கணம் இன்னொன்றாகத் தெரிவது. கனவுகளின் உரிசையைத் திரட்டித் தின்ன எத்தனிக்கும் ஒவ்வொரு உயிருக்கும் இவ் வாழ்வென்பது கொடை.

3

மொத்தச் சனத்திரளின் பொதுப்புத்தியிலிருந்து ஒவ்வொரு விடயங்களையும் ஒப்புநோக்கி தமக்கான தனித்துவத்தைக் கண்டடைந்து அதை வலிந்த கயிறாக்கி பயணத்தில் பற்றித்திளைப்பதும், சிதறிய கூட்டத்திற்குப் பின்னேயே எந்த நோக்குநிலையுமில்லாமல் செல்வது போன்று திசையறியாது போவதும் அவரவர் நோக்கு நிலைகளையும் கனவுகளையும் பொறுத்தது. இன்னொருவர் போலல்லாத கனவுகளும் வாழ்வுமுறையும் ஆசையின் பல்பிரவாகங்களும் கொண்ட சிந்திக்கும் உயிர்களுக்கு தாமே கைப்பட நெய்து உடுத்திக்கொள்ளக் கிடைத்த பெருவாழ்வு.

என்னளவில் இவ் வாழ்வென்பது நிரந்தரமின்மைகளின் தொடர்ச்சி. இங்கே சக உயிர்களைப் பற்றிக்கொள்வதற்கும் பற்றற்று அலைவதற்கும் இடையில் நூலளவு இடைவெளியே காணப்படுகிறது. பாழ்வெளி மனதுக்குள்ளே கட்டுண்டு, தொலைத்து, தொலைந்து அகத்தின் தேடல்களுக்காய் எம்பிக் குதித்துக்கொண்டிருக்கின்றோம். இதுவொரு மாயாஜால கதைகளுக்குள் உலாவும் திக் திக்கென்ற தருணங்களைக்கொண்ட அடுத்த நொடியின் மெய்மையை அறியவிழையும் கார்காலப் பெருங்கடலின் ஆர்ப்பரிப்பு.

கவிதை, முதல் அவிழ்ந்த ஒற்றைச் சொல்லைப் பற்றிப்பிடித்தேறும் பெருவனத்தின் வெம்மையும் குளிர்வும். பிறப்பும் வாழ்வும் போல, பல நூற்றாண்டுகளின் எம்மை மிஞ்சிய வாழ்வனுபவங்களான காதலுக்கும், தனிமைக்கும், கண்ணீரின் வற்றிய நிலைக்கும் ஒற்றைச் சொல்லில் நிகழும் பாடுகளான கவிதைகள் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகள் நெடிய வாழ்வு கொண்டவை. அவற்றின் மௌனத்திற்கும், இருப்பிற்கும் இடையில் தத்தளித்துக்கொண்டிருக்கும் மீதமிருக்கும் வாழ்வு தன்னை பலியாடென வளர்த்தியிருக்கின்றது. நான் என்றைக்கும் பித்துற்ற வரிகள் இருக்கின்றன. அவை காயத்தின் பல்லடுக்குகளில் இருந்து எண்ணிக்கையற்ற முறையில் மருந்திட்டு மீண்டும் மீண்டும் அத்துயருள் மூழ்கி மல்லுக்கட்டி மேலெழ வைத்திருக்கின்றன. அவையே எனது ஆத்ம மீட்பின் "பாழில் பரவுகின்ற மெல்லிய வெளிச்சம்" கவிதையென்பது வாழ்வின் தருணங்களில் தன்னை முற்றறிந்து நிகழ்வது, முந்திச் சென்று தன்னை நிலைநிறுத்திக்கொண்ட ஒற்றைச் சுக்கிலம் போன்றது.

ஈழத்தின் கவிதைச் சூழலில் பெண்ணியக் கருத்துநிலைகளோடும், அரசியல் நோக்குகளோடும் எழுதப்பட்ட கவிதைகளில் செல்வி, சிவரமணி, ஊர்வசி, அவ்வை, தர்மினி, கற்பகம் யசோதர, தில்லை போன்றோர் பேசும் அரசியலும் தனித்துவமானது. அவ்வாறே அனாரினது வாழ்வும், நிலமும், அவர் கனவளிக்கும் குழந்தமையின் எம் அன்றாடத்தின் பெருங்கனவும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மாவின் வீடு: அதுவொரு காலம்




○ கோகுலராகவன்

உலகில் உங்களுக்குப் பிடித்த இடம் எதுவென்று ஓர் அறிஞரிடம் கேட்டபோது அவர் எந்தத் தயக்கமுமின்றி "என்வீடு" எனப் பதிலளித்தாராம். உண்மைதான் நீங்கள் சொர்க்கத்துக்குப் போனாலும் பொழுதுபட "இனி வீட்டுக்குப் போவம்" என்றுதான் எண்ணுவீர்கள். வீடு அழகானது என்றால் அதைவிட அழகானது "அம்மம்மா வீடு" என்பது எனது மேலான அபிப்பிராயம். பள்ளியால் வந்து சாப்பிட்டதும் அம்மம்மா வீட்டுக்கு ஓடுவது வழமை. அங்கு ஏதோவொரு நொறுக்குத்தீனி கட்டாயம் கிடைக்கும்.

அம்மப்பா கட்டாயம் சந்தைப்பலகாரம் வாங்கிவந்து வைத்திருப்பார். அல்லாவிட்டால் அவித்த பனங்கிழங்கு கிடைக்கும். அதிலே நல்ல முறுகின கிழங்காக மாமாவுக்கு அம்மம்மா எடுத்துவைத்திருப்பார். அதிலே ஒன்றை ஆட்டையைப் போட்டால் வாய் இதமாக அசையும். அல்லது நல்ல மிளகு உறைப்புப் போட்ட பனங்கிழங்குத் துவையல் கிடைக்கும். அந்த உறைப்பு உச்சியில் அடிக்கும். அப்பப்பா...... என்ன சுவை!

வீட்டில் ஒரு தவறைச் செய்துவிட்டு ஒளிக்கிற இடம் அம்மம்மா வீடுதான். அம்மம்மாவைத் தாண்டி எந்தக் கொம்பனும் கிட்ட வரவே முடியாது. "இந்த மனுசி பொடியளைப் பழுதாக்குது" என்று அப்பா சொல்வார். அம்மம்மாவோடு கோவிலுக்குப் போன நாள்கள் மிகவும் இனிமையானவை. அதிலும் உச்சம் எதுவென்றால் கச்சார்வெளிப் பிள்ளையார் கோவிலுக்குப் பிள்ளையார்கதை விரதத்துக்கு நடந்துபோவது. போகும் பாதையில் வெள்ளம் நிற்கும். இரசித்தபடி போகலாம். கோவிலில் ஒரு பொரித்த மோதகம் தருவார்கள். அபார ருசி. பெருங்கதைப் பூசைக்கு அன்றிரவு அம்மம்மாவோடு கோவிலில தங்குவோம். பல நண்பர்களோடு அரட்டை அடிக்க நல்ல வாய்ப்பு. அம்மம்மாவின் குழுவில் பவளப் பெரியம்மா, செல்லம்மாக்கா, நாகேந்திரண்ணையின் தாய், சிலவேளை நல்லம்மா மாமி இப்படிப் பலர். இவர்கள் கோவிலில் இரவு கூடியிருந்து கதைத்தபடி விடிய அன்னதானத்துக்கு மரக்கறி வெட்டும் பாவனை தனிதான். அம்மம்மாவோடு வாழ்ந்த நாள்கள் மிக இனிமையானவை. அம்மம்மா வண்ணாங்கேணியில் பிறந்து அல்லிப்பளையில் வாழ்க்கைப்பட்டு 2009 இல் இருட்டுமடுவில் காலமாகிவிட்டார். இருட்டுமடு வரை இடம்பெயர்ந்து போகவேண்டிவந்துவிட்டது. அந்த 80 வயதிலும் இறுதிச் சடங்கில் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை என்பது வாழ்நாள் துயரம். அம்மம்மா வீட்டில் கொண்ட இனிமையான உணர்வை கமலாதாஸ் என்ற இந்தியக் கவிஞரும் பெற்றிருக்கிறார். அதனை அவரது "அம்மம்மா வீடு" (Granma house)என்ற கவிதையில் மிக அழகாகத் தருகிறார்.

மிகத் தொலைவில்
ஒரு வீடு இருந்தது
அங்கே நான் ஒரு தடவை
அன்பைப் பெற்றுக்கொண்டேன்
அந்தப் பெண் மறைந்து விட்டாள்
வீடு இருளில் மூழ்கிவிட்டது
பாம்புகள் புத்தகங்களின் ஊடே
புகுந்து கொண்டன.
அப்போது எனக்கு வாசிக்கும்
பக்குவம் இருக்கவில்லை
அங்கு போவதை நினைக்கையில்
நிலவின் குளிர்மையை உணர்கின்றேன்.
இருண்ட யன்னல்கள் ஊடாக
எட்டிப்பார்க்க
இரையும் காற்றைக் கேட்க
தனிமையை உணர
இருளை இருகை முட்ட
அள்ளி வந்து எனது படுக்கை அறையில்
ஒரு சுருண்டு படுக்கும் நாயைப்போல போட
நீ நம்ப மாட்டாய் அன்பே!
அப்படி ஒரு வீட்டில்
நான் வசித்தேன்.
பெருமையுடன்
அன்புடன்
இப்போது ஒரு பிச்சைக்காரன் போல
ஒவ்வொரு வாசற்கதவையும்
தட்டுகின்றேன்
ஆகக் குறைந்தது
சிறு மாற்றத்திற்காகவும்.

இந்தக் கவிதையை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கும்போது எனக்கு எனது அம்மம்மாவுடன் வாழ்ந்த நாள்கள் நினைவில் மலர்ந்தன. இந்த இடத்தில் கமலாதாஸ் உயர்ந்த கவிஞர் ஆகிறார். கவிதையைப் படியுங்கள். நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் அம்மம்மா வீட்டுக்கு ஒரு தடவை போவீர்கள்.

# உணர்ந்தினம்

பாகம் 3

○ இராகவன்

இப்ப தபால்காரர் சைக்கிள்ளில வந்து மணியடிக்கிற நடைமுறையும் வழக்கொழிஞ்சுபோச்சுது. அநேகமான தபால்காரர் மோட்டச்சைக்கிளிலதான் வந்து 'கோர்ண்' அடிக்கினம். உவர் வைரமுத்து அதுதான் கவிப்பேரரசு 'காதல் வந்தால் என்னென்ன நடக்குமெண்டு' ஒரு கவிதை எழுதியிருக்கிறார் எண்டது உங்கள் எல்லாருக்கும் அநேகமாத் தெரிஞ்சுதானிருக்கும். சிலருக்கு அந்தக் கவிதை தலைகரணமான பாடமாயிருக்கும் . அதில் ஒருவரி வரும். "உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும். தபால்காரன் தெய்வமாவான்" எண்டு அவர் சொன்ன தபால்காரன் சைக்கிள்ள 'டிங்.. டிங்.. டிங்..'எண்டு மணியடிச்சுக் கொண்டு வாற தபால்காரன்தான். இப்ப உந்தப் பேஸ்புக், வட்ஸ்அப், ருவிற்றர் எண்டு வந்திட்டதால தபால்காரன் தெய்வ நிலையிலிருந்து விலகியிட்டான் எண்டுதான் சொல்லவேணும். தபால்காரனைப் பற்றிக் கதை வரேக்குள்ள போஸ்காட்டும் உடனடியாக ஞாபகம் வரும்.

போஸ்ட்காா்ட்டுக்கெண்டு ஒரு தனியிடமிருக்கு. என்வலப்புக்குள்ள வைச்சு அனுப்புற கடிதத்த மூடிய அஞ்சல் எண்டு சொல்லுறது. போஸ்ட்கார்ட்டில அனுப்புற அஞ்சல திறந்த அஞ்சல் எண்டு சொல்லுறது. சிலருக்கு இந்த இரண்டுக்கும் வித்தியாசம் தெரியிறேல்ல. அதால மூடிய அஞ்சல்ல அனுப்ப வேண்டிய விசயத்தையெல்லாம் போஸ்ட் கார்ட்டில எழுதியனுப்புற ஆக்களும் இருக்கினம். இதிலயென்ன வில்லங்கமெண்டால் அதை எல்லாரும் வாசிக்கிற தன்மையிருக்கு. முதல்ல தபால்காரர் வாசிப்பார். பிறகு தபால்காரருக்கு விலாசத்துக்குரியவரை அச்சொட்டாத் தெரியாட்டில் இன்னொராளிட்டக் காட்டி விசாரிக்கேக்குள்ள அவரும் அதை வாசிப்பார். அவருக்கும் விலாசத்துக்குரியவரைத் தெரியாட்டில் இன்னொராளிட்டக் காட்டிக் கேக்கவேண்டிவரும். அப்ப அவருமதை வாசிப்பார். இப்பிடிப் பலரும் வாசிச்சாப் போலதான் விலாசத்துக்குரியவரின்ர கைக்குக் கிடைச்சு அவர் வாசிப்பார் . அதால போஸ்ட் காா்ட் அனுப்பேக்குள்ள கவனமாயிருக்கவேணும். மிகச்சுருக்கமான அவசரமான விசயங்களை அனுப்பிறதுக்குத்தான் போஸ்ட் கார்ட்டைப் பாவிக்கவேணும் . அதில கண்டது கடியதெல்லாம் எழுதக்கூடாது எண்டதில அனுப்புறாளுக்கு ஒரு தெளிவு இருக்கவேணும். இதைப்பற்றிக் கதைக்கேக்குள்ளதான் எனக்குச் சில விசயங்கள் ஞாபகத்துக்கு வருகுது.

அப்ப தொண்டைமானாற்றில ஜெகதீஸ்வரன் எண்டொராள் இருந்தவர். 1983 இல் கொமர்ஸ் படிச்சு'4 ஏ' எடுத்த விண்ணன். "கீன்ஸ் கல்விநிலையம்" எண்டொரு ரியூட்டறியும் நடத்தினவர். எங்கட மூத்தண்ணரும் அவரோடதான் கம்பஸுக்கு எடுபட்டவர். இரண்டுபேரும் நல்ல நெருக்கம். அப்பெல்லாம் மூத்தண்ணருக்கு அவர் தொண்டைமானாற்றிலயிருந்து போஸ்ட் கார்ட் போடுவார். குணுக்கி குணுக்கிப் போஸ்ட் கார்ட்டை நிரப்பிக் கன விசயங்கள் எழுதுவார். அப்ப எங்கட இளையண்ணா ஏ.எல் எடுத்தவன். ரிசல்ற் பெரிசா எழுப்பமில்லை. றிப்பிற் படிச்சுக்கொண்டிருந்தவன். சோதனை நெருங்கிற மூட்டம் மெடிக்கல் குடுத்திட்டான். அதிலயொண்டும் பிரச்சினை இருக்கேல்ல. ஆனால் எங்கை பிரச்சினை வந்திச்சுதெண்டால் ஜெகதீஸ்வரன் மூத்தண்ணருக்குப் போஸ்ட் கார்ட் போடேக்குள்ள அதில இந்த ரொப்பிக்கைக் குறிப்பிட்டு ஒரு விமர்சன நோக்கில் எழுதியிருந்தார். அந்த போஸ்ட் கார்ட்டைத் தபால்காரர் வீட்டை கொண்டுவரேக்குள்ள அதை இளையண்ணாதான் போய் வாங்கினவன். வாங்கினவன் வாசிக்காமலிருப்பானே. அதை வாசிச்சவுடன ஒரு துள்ளுத் துள்ளினான். எனக்கு அண்டைக்குத்தான் போஸ்ட் கார்ட்டிலயிருக்கிற வில்லங்கம் விளங்கிச்சுது. பிறகு மூத்தண்ணர் வந்தாப்போல அவரோடயும் தனகுப்பட்டான். 'உந்தாளுக்கேன் தேவையில்லாத வேலை?' எண்டு நான் நினைச்சன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர். பிரகாஷ்



# புத்துயிர்பெறும் ஐ.எஸ்.ஐ.எஸ்!

**2025** என்னும் புதுவருடம் ஆபத்தான எச்சரிக்கையுடன் ஆரம்பித்திருக்கின்றது. உலகப் பயங்கரவாத அமைப்பு என்று அறியப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு, இந்த வருடத்தில் புத்துயிர்ப்புப் பெறுவதற்குச் சாத்தியங்கள் மிக அதிகம் என்று எச்சரித்திருக்கின்றன உலக நாடுகள். இதை மெய்ப்பிப்பதுபோல் உலக அரங்கில் அண்மைக்காலமாக இடம்பெறும் சம்பவங்கள் மிகவும் பதற்றமடைய வைப்பதாகவே அமைந்திருக்கின்றன.

அமெரிக்காவின் நியூஓர்லியன்ஸ் மாகாணத்தில் வர்த்தகச் சந்தையொன்றுக்குள் வாகனத்தை மோதித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 20க்கும் அதிகமானவர்கள் காயமடைந்த நிலையில், இந்தத் தாக்குதலின் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பே உள்ளது என்றும், இதுவொரு குழுத் தாக்குதல் என்றும் எச்சரித்திருக்கின்றது அமெரிக்கப் புலனாய்வு அமைப்பு.

அத்துடன், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைய முற்பட்ட குற்றத்துக்காக அமெரிக்காவின் அயல்நாடான கனடாவின் ரொறன்ரோ நகரில் இளம்பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பரிஸ் மற்றும் பெர்லின் போன்ற பகுதிகளிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தாக்குதல் திட்டம் முறியடிக்கப்பட்டிருக்கின்றது. இவை அனைத்தும் வெறும் ஐந்து நாள்களுக்குள்ளாக நடந்து முடிந்திருக்கின்றன. அனைத்துச் சம்பவங்களையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால், அல் பக்தாதியின் மறைவுடன் காணாமல் போய்விட்டது என்று கருதப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தற்போது மீளவும் கட்டமைக்கப்பட்டு வருகின்றமை புலனாகின்றது.

**எந்தவொரு நாட்டில் அரசியல் தளம்பல்நிலை ஏற்படுகின்றதோ அங்கு, ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் மிகையாக அதிகரிக்கும் என்பது நிதர்சனமான உண்மை. சிரியாவில் 50 ஆண்டுகளாக நிலவிவந்த அசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தபின்னர், ஐ.எஸ்.ஐ.எஸ். தன்னை வெளிப்படையாகக் கட்டமைக்கும் பகுதியாக அந்த நாடு மாறியிருக்கின்றது.**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்றம்பெற்ற நாடுகளான ஈராக் மற்றும் சிரியப் பாலை நிலங்களில் மீண்டும் அந்த அமைப்பு வலுவாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது என்று எச்சரித்துள்ள பிரான்ஸ், ஐ.எஸ். ஐ .எஸின் நிலைகள் என்று கருதப்படும் இடங்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களையும் ஆரம்பித்துள்ளமையும் இங்கு கோடுகாட்ட வேண்டிய விடயமாக அமைகின்றது.

எந்தவொரு நாட்டில் அரசியல் தளம்பல்நிலை ஏற்படுகின்றதோ அங்கு, ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் மிகையாக அதிகரிக்கும் என்பது நிதர்சனமான உண்மை. சிரியாவில் 50 ஆண்டுகளாக நிலவிவந்த அசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தபின்னர், ஐ.எஸ்.ஐ.எஸ். தன்னை வெளிப்படையாகக் கட்டமைக்கும் பகுதியாக அந்த நாடு மாறியிருக்கின்றது. சிரியத் தலைநகர் டமஸ்கஸின் புறநகர்ப் பகுதிகளில்கூட ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக இஸ்ரேலின் புலனாய்வுத் தகவல்கள் எச்சரித்திருக்கின்றன. இந்த எச்சரிக்கை வெளிவந்த சூடு ஆறமுன்னரேயே சிரியாவிலும், ஈராக்கிய பாலை நிலங்களிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது அமெரிக்கக் கூட்டுப்படை.

பயங்கரவாதமும் ஆக்கிரமிப்பும் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுக்கு ஊறிப்போன விடயங்கள். எனவே, மீண்டுமொரு நில ஆக்கிரமிப்பை மேற்கொள்வது அந்த அமைப்புக்கு சிரமமாக இருக்கப்போவதில்லை. ஆதலால், அந்த அமைப்பின் இரண்டாம் வருகையை ஆரம்பத்திலேயே அழித்தொழிக்க வேண்டியது உலக நாடுகள் முன்னுள்ள தலையாய கடமையாகும். இல்லையேல், ஹோம்ஸ், பல்மைரா, ஹமா நகர்களில் ஐ.எஸ்.ஐ.எஸ்.ஸால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் மீண்டும் ஒருமுறை உலகை கலக்கமடைய வைக்கும்.

# 2025:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்புக்குள்ளும் இருந்தார். அவரைத்தவிர வேறு சில விரிவுரையாளர்கள் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக உதிரிகளாகக் காணப்பட்டார்கள். ஆனால் ஒரு அறிவாளிகள் சமூகமாக அவர்கள் திரண்டு பொதுவேட்பாளரை ஆதரிக்கவில்லை. ஒப்பீட்டளவில் பொது வேட்பாளருக்கு ஆதரவான விரிவுரையாளர்கள்தான் அதிகம். ஆனால் அவர்கள் அமைப்பாக்கப்படவில்லை.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில புத்திஜீவிகள் என்.பி.பி.க்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து ஊடக சந்திப்பை நடத்தினார்கள். எனினும் அதில் அவர்கள் திட்டவட்டமாக தெளிவாக என்.பி.பி.யை ஆதரிக்குமாறு கூறுவதற்குத் தயங்கினார்கள். ஆனால் அந்த தயக்கம் தேர்தல் வெற்றிகளின் பின் இப்பொழுது மறைந்துவிட்டது. அவர்கள் தயங்கித்தயங்கி யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்களுக்கு வழிகாட்டிய போது அவர்களுக்கு எதிராக கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டு பல்கலைக்கழகத்தில் ஒட்டப்பட்டன. அவர்களைக் கருத்து ரீதியாக வென்றெடுப்பதற்கோ அல்லது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்களை ஒரு அமைப்பாகத் திரட்டுவதற்கோ முயற்சி எடுக்கப்படவில்லை. மாணவ அமைப்புகளும் அந்த விடயத்தில் திடகாத்திரமாகச் செயற்படவில்லை.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு தயங்கித் தயங்கி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய என்.பி.பி.க்கு ஆதரவான புத்திஜீவிகள் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் துணிச்சலாக முன்வந்து தமது அரசியல் சாய்வை வெளிப்படுத்தினார்கள். தமிழ்த் தேசியவாத அரசியலை "மலட்டு அரசியல்" என்றும் அழைத்தார்கள். இது யாழ்.பல்கலைக்கழகத்தின் இப்போதுள்ள அரசியல் சூழலைக் காட்டுகின்றது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் நிலைமை இதுவென்றால், ஏனைய துறைசார்ந்த கட்டமைப்புகளைக் குறித்துச் சிந்திக்கத் தேவையில்லை. அதைவிட மோசமான ஒரு விடயம், தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் பொருத்தமான மக்கள் கட்டமைப்புகள் அநேகமாக இல்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தேசியவாத அரசியல் என்றால் என்னவென்று தெரியவில்லை. தேசியவாத அரசியல் என்பது மக்களை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. எப்படிக் கூட்டிக் கட்டுவது? அவர்களை அரசியல் மயப்படுத்த வேண்டும்; அல்லது குறைந்தது இனமான உணர்வின் அடிப்படையிலாவது திரட்டவேண்டும்; அமைப்பாக்க வேண்டும். ஆனால் எத்தனை தமிழ்க் கட்சிகளிடம் அவ்வாறான கட்டமைப்புகள் உண்டு?

ஆனால் இந்த வெற்றிடத்தை என்.பி.பி. விளங்கி வைத்திருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவ அமைப்புகளோடு தொடர்புடைய தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் என்.பி.பி.க்கு ஆதரவாகத் தமிழ்க் கிராமங்கள் சிலவற்றில் வேலை செய்திருக்கிறார்கள். எனவே இப்பொழுது தேர்தல் வெற்றிகள் தந்த உற்சாகத்தோடு, அரச பலத்தோடு என்.பி.பி. தமிழ்ப் பகுதிகளில் தனது கட்டமைப்புகளை ஆழமாகப் பலப்படுத்தி விரிவுபடுத்தி வருகிறது.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகம் தெரிகின்றன. உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் பெரும்பாலும் முதலில் நடத்தக்கூடும். காசு வேண்டும். ஆனாலும் கடந்த ஆண்டு கிடைத்த தேர்தல் வெற்றிகளை அடுத்தடுத்த கட்டத்துக்குப் பலப்படுத்துவது என்றால் தேர்தல்களை வைக்க வேண்டும். குறிப்பாக இந்தியாவைச் சமாதானப்படுத்த மாகாணசபைத் தேர்தலை வைக்க வேண்டியிருக்கும். எனவே இந்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையக்கூடிய வாய்ப்புகளே அதிகம். இப்படிப்பட்டதொரு பின்னணியில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் தங்களுக்கு வழங்கிய தீர்ப்பிலிருந்து கற்றுக்கொண்டு, என்.பி.பி.யையும் அர்ச்சுனாக்களையும் எதிர்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தயாரா? அல்லது, சிவப்பு மஞ்சள் கொடியைக் காட்டினால் தமிழ்த்தேசிய வாக்குகள் கொத்தாக வந்து விழும் என்று கற்பனையில் மூழ்கியிருக்கிறார்களா?

தமிழ் மக்களை அமைப்பாக்கவில்லையென்றால் அர்ச்சுனாக்கள் மேலும் பெருகுவார்கள். தமிழ் மக்களின் சின்னச்சின்ன பிரச்சினைகளை, சின்னச் சின்னக் கவலைகளை; குறைகளைக் கேட்பதற்கும் அறிவதற்கும் அந்தந்தத் துறைக்குரிய மக்கள் கட்டமைப்புகள் வேண்டும். அவை இல்லாத வெற்றிடத்தில் தான் அர்ச்சுனாக்கள் வெற்றி பெறுகிறார்கள். எனவே இந்த ஆண்டு நடக்கக்கூடிய தேர்தலில் தேசத்தைத் திரட்டி வெற்றி பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் ஏதாவது புதிய உபாயங்கள் உண்டா?

இருப்பதில் பெரிய கட்சி தமிழரசுக் கட்சி இப்பொழுதும் நீதிமன்றத்தில் நிற்கின்றது. இனி மேலும் நிற்கப்போகிறது என்றுதான் தெரிகிறது. அதன் உட்கட்சிப் பிரச்சினைகளைத் தீர்க்க அதனால் முடியவில்லை. எப்படி ஏனைய கட்சிகளை இணைப்பது?

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தோல்விகளில் இருந்து கற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில்தான் அவர்கள் அரசியல் தீர்வை நோக்கிய ஒன்றிணைப்பு முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் பலமாகக் காணப்படும் சுமந்திரன் அணி அதற்கு ஒத்துழைக்குமா?

மேலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் முன்னணியை நம்புமா? அந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் மீது முன்னணி கடந்த காலங்களில் உமிழ்ந்துவிட்ட கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளை முன்னணி கைவிட்டு விட்டதா?

இவை தவிர தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த்தேசிய பசுமை இயக்கம், உள்ளிட்ட ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் ஏதாவது உண்டா ?

முன்னணியின் ஐக்கிய முயற்சிகள் யாப்புருவாக்க நோக்கிலானவை. அவை தேர்தல் தேவைகளுக்கானவை அல்ல என்று தெரிகிறது. ஆனால் தேர்தல்கள் முதலில் வரும். யாப்பு வருமா வராதா என்பது நிச்சயமில்லை. ஏனென்றால் நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுக்காவது நிமிர்த்தாமல் யாப்பில் கை வைப்பது ஆபத்தானது என்று என்.பி.பி.க்கு விளங்கும். குறிப்பாக மகா சங்கத்தினர் இப்போதைக்கு ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிக்கு ஆதரவாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

எனவே யாப்புருவாக்கத்தை விடவும் அவசரமானது தேர்தல்கள்தான். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் என்.பி.பி. புதிய வெற்றிகளைப் பெறுமாக இருந்தால், அது யாப்புருவாக்க முயற்சிகளில் செல்வாக்குச் செலுத்தும். அவர்கள் தமிழ்த் தரப்பில் பொருட்படுத்த வேண்டிய தேவை இப்பொழுது இருப்பதைவிட மேலும் குறையும். அதை தமிழ்த் தரப்பு எப்படித் தீர்க்கதரிசனமாக, ஐக்கியமாக எதிர்கொள்ளப் போகின்றது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org